உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

நாற்பத்துமூன்றாந்தொகுதி.

**Volume 43.**

பார்த்திப—விய ௵

1945—1946

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

# செந்தமிழ்

## ௪௩-ஆம் தொகுதியின் உள்ளுறை.


| விஷயம். | எழுதியவர். | பக்கம். |
| --- | --- | --- |
| அச்சுதப்பநாயக்கர் கல்வெட்டு:— | திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள் | ௯௬ |
| அதிவீரராம பாண்டியன்:— | திரு. பண்டித. இராமசுப்பிரமணியநாவலரவர்கள் | ௮௦ |
| ஸேதுஸம்ஸ்தான மஹாவித்வான் பாஷாகவிசேகரர் ரா. இராகவையங்காரவர்கள் பிரிவாற்றது புலவர்கள் இயற்றிய இரங்கற்பாக்கள்:— | திரு. ராவ்ஸாஹிப். மு. இராகவையங்காரவர்கள் | ௧௫௦ |
| | ,, குமரகவி. மு. நாராயணசாமிப்பிள்ளையவர்கள் | ௧௫௨ |
| | ,, ச. சோமசுந்தரபாரதியாரவர்கள் M.A.,B.L. | ௧௫௩ |
| | ,, இ. சே. வரதராஜையரவர்கள் B.A | ௧௫௩ |
| | ,, T. N. அப்பனையங்காரவர்கள் | ௧௫௫ |
| | T. K. இராமாநுஜையங்கார் | ௧௫௫ |
| | திரு. வித்வான் பண்டிதர் R. வீரராகவையங்காரவர்கள் | ௧௫௭ |
| | ,, சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் | ௧௫௮ |
| | ,, K. சிவஞானம்பிள்ளையவர்கள் | ௧௬௦ |
| | , ஜெ. நாராயணசுந்தரமையங்காரவர்கள் | ௧௬௨ |
| | ,, வே. முத்துஸாமிஐயரவர்கள் M.A,L.T. | ௧௬௩ |
| | ,, ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L. | ௧௬௮ |
| இராமன்தருதலவாஸம்:— இராமாவதார இரகசியம்:— | திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L. | ௧௯௦ ௨௦௪ |
| இளம்பூரணஅடிகளும் மணக்குடவரும்:— | திரு. க. வெள்ளைவாரணரவர்கள் | ௮௧ |
| எழுத்தும் பேச்சும்:— | திரு. பண்டிதர். கா. பொ. இரத்தினம் அவர்கள் B.A. (Hons.) B.O L. | ௧௩௭ |
| ஒருதுறைக்கோவை யாராய்ச்சி:— | T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர் | ௧, ௬௧, ௧௬௫, ௧௮௫, ௨௨௫ |

கம்பர்காலம் :— திரு. ராவ்ஸாஹிப். ஸ்ரீ. S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L. கூஎ

கம்பர்தோத்திரம்:— திரு. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் கஉஅ

கம்பராமாயணத்துள் ஒரு பாசுரவுரை :— திரு. N R கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L. ககசு

கல்வெட்டுக்களால் அறியப் பெறும் மூன்று தமிழ்நூல்கள்:- திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள் கஅ

கவிதாவாசகம் (தேசிகவி நாயகம்பிள்ளை):- திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர்வர்கள் B.A., B.L. கஉகூ

கவிதையும் கற்பனையும்:— திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர்வர்கள் B.A., B.L. க0கூ

கவிமணிதேசிகவி நாயகம் பிள்ளையவர்களைப்பற்றிய குறிப்புக்கள்:— திரு. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் கஎரு

சிலப்பதிகாரக் காப்பியஇலக்கணம்:- திரு. மஹாமஹோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள். சக

செய்யுட்கடிதங்கள்:- திரு. மஹாமஹோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள். உரு

தஞ்சை நாயக்கமன்னரது கல்வெட்டுக்கள் :— திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், கசக

திருக்குற்றலத்தலபுராண இன்கவிவிளக்கம்:— திரு. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் உக, சுரு, கககூ

திருக்குறுக்கைச்சிவன்கோயிற் கல்வெட்டுக்களின் சுருக்கங்கள்:- திரு. வை. சுந்தரேச வாண்டையாரவர்கள் ருரு

திருத்துருத்திச்சொன்னவாறறிவார்கோயிற் கல்வெட்டுக்களிற்கண்டசெய்திகள்:— திரு. வை. சுந்தரேச வாண்டையாரவர்கள் உ0க

திருவள்ளுவர்காலம்:— திரு. ராவ்ஸாஹிப் S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A , B.L. ரு

நகைச்சுவையும் தமிழிலக்கியமும்:— திரு. பண்டிதர். கா. பொ. இரத்தினம் அவர்கள், B.A. (HONS.) B.O.L. கசுகூ, உஉகூ

நூற்றெட்டுத்திருப்பதிப் பாடல்கள்:— திரு. வித்வான். ரா. இராமாநுஜையங்காரவர்கள் உஙஉ

படை:—ஸ்ரீ. பண்டித. ஆ. சிவசுப்பிரமணியஐயரவர்கள் ருகூ

பண்டைமக்களின் பொது இருப்பிடம்:-ஞானப்பிரகாசரவர்கள் ககூஅ, உஙரு

பரிசோதனத்தொடர்:— திரு. பண்டித. ஆ. சிவசுப்பிரமணிய ஐயரவர்கள் கஎஅ

பரீசோதனத்தொடர்:—திரு. க. சு. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள் ௧௮௮

பல்லவர்மீது சாசனப்பாடல்கள்:- } திரு. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L. ௫௫

பழையாறைநகர்:—திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள் ௭௫

பெருங்கவிஞர்பிரிவு:—பத்திராசிரியர் ௨௨௧

பெரும்புலவர்பிரிவு:- } திரு. மஹாமஹோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள் ௧௪௮

பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் நினைவுக்குறிப்பு:— } திரு. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் ௨௧௨

பொருட்புடைபெயர்ச்சி:—திரு. சி. கணேசையரவர்கள் ௧௧௭

மதிப்புரை:— ௨0, ௫௪, ௧௪௫, ௧௯௫

மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத் தீர்மானங்கள்:— ௧௨௫

மன்னார்குடி இராசகோபால ஸ்வாமி கோயிற் கல்வெட்டுக்களின் சுருக்கங்கள்:— } தி.ரு வை. சுந்தரேசவாண்டையாரவர்கள் ௮௫

மஹாவித்துவான்மறைவு:—பத்திராசிரியர் ௧௪௫

மாற்பிடுகு பெருங்கிணறு:— } திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள் ௧0௫

முத்தொள்ளாயிரத்தில் மூன்று:— } திரு. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் B.A., (HONS.) B.O.L. ௪௧

வருங்காலப்புத்தகாலயங்கள்:-திரு. கே. மா. சிவராமன் அவர்கள் B.A. ௨0௫

வேந்தர்பெருமான் வெள்ளணிநாட்சிறப்பு:- } T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். ௧௨௫

---

## அநுபந்தம்.

ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:— (அநுபந்தம் 1—6.)

---

# செந்தமிழ் ௪௩-ஆம் தொகுதிக்குப் பொருளுரைவழங்கியோர்பெயரும் பொருளுரைகளின் பெயரும் பக்கமும்


திரு. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L. மயிலாப்பூர்.

கவிதாவாசகம் (தேசிகவிநாயகம்பிள்ளை) ... ௧௨௯

கவிதையும் கற்பனையும் ... ... ௧0௯

திரு. பண்டிதர். கா. போ. இரத்தினம் அவர்கள் B.A. (Hons.) B.O.L. கோழும்பு.

எழுத்தும் பேச்சும் ... ... ௧௩௭

நகைச்சுவையும் தமிழிலக்கியமும் ௧௬௯, ௨௨௯

முத்தொள்ளாயிரத்தில் மூன்று ... ௪௯

திரு. பண்டித. இராமசுப்பிரமணியநாவலரவர்கள், பதுமநாபபுரம்.

அதிவீரராமபாண்டியன் ... ... ௮0

T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்.

இரங்கற்பாக்கள் ... ... ௧௫௫

ஒருதுறைக்கோவையாராய்ச்சி ௧, ௬௯, ௧௬௫, ௧௮௫, ௨௨௫

வேந்தர்பெருமான் வெள்ளணிநாட்சிறப்பு ... ௧௨௫

திரு. வித்வான் ரா. இராமாநுஜையங்காரவர்கள், தமிழாசிரியர் ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்

நூற்றெட்டுத்திருப்பதிப் பாடல்கள் ... ௨௩௨

திரு. சி. கணேசையரவர்கள், புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.

பொருட்புடைபெயர்ச்சி ... ... ௧௧௭

திரு. மகாமகோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள்.

சிலப்பதிகாரக்காப்பிய இலக்கணம் ... ௪௧

செய்யுட்கடிதங்கள் ... ... ௨௫

பெரும்புலவர்பிரிவு ... ... ௧௪௮

திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், B.A., B.L. மதுரை.

இராமன் குருகுலவாஸம் ... ... ககூ0

இராமாவதார இரகசியம் ... ... உ0ச

கம்பராமாயணத்துள் ஒரு பாசுரவுரை ... ககசு

திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள், ஆசிரியர், அண்ணுமலை பல்கலைக்கழகம்.

கல்வெட்டுக்களால் அறியப்பெறும் மூன்று தமிழ்நூல்கள் ... ... கஅ

பழையாறைநகர் ... ... எங

மாற்பிடுகுபெருங்கிணறு ... ... க0ரு

திரு. பண்டித. ஆ. சிவசுப்பிரமணிய ஐயரவர்கள், தமிழாசிரியர், இராமேசுவர தேவஸ்தான பாடசாலை, மதுரை.

படை ... ... ... ருகூ

பரிசோதனத்தொடர் ... ... கஎஅ

திரு. கே. மா. சிவராமன் அவர்கள், B.A. உதவிக்காரியதரிசி, புத்தகாலயப் பிரசாரசங்கம், சென்னை.

வருங்காலப் புத்தகாலயங்கள் ... ... உ0ரு

திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், ஆசிரியர், திருவையாறு.

அச்சுதப்பநாயக்கர்கல்வெட்டு .. ... சுசு

தஞ்சைநாயக்கமன்னரது கல்வெட்டுக்கள் ... கசக

திருக்குறுக்கைச் சிவன்கோயிற் கல்வெட்டுக்களின் சுருக்கங்கள் ... ருரு

திருத்துருத்திச் சொன்னவாறறிவார்கோயிற் கல்வெட்டுக்களிற்கண்ட செய்திகள். ... உ0க

மன்னார்குடி இராசகோபாலசுவாமிகோயிற் கல்வெட்டுக்களின் சுருக்கங்கள் ... அரு

திரு. ராவ்ஸாஹிப். வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், வெள்ளகால்.

கம்பர்தோத்திரம் ... ... கஉஅ

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையவர்களைப் பற்றிய குறிப்புக்கள். ... ... கஎரு

திருக்குற்றாலத்தலபுராண இன்கவிவிளக்கம் உக, சுடு, ககூரு.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் நினைவுக் குறிப்பு. ... ... ... உகஉ

திரு. சுவாமி ஞாநப்பிரகாசரவர்கள், நல்லூர், யாழ்ப்பாணம்.

பண்டைமக்களின் பொது இருப்பிடம் ககூஅ, உருடு

திரு. க. சு. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள், மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்.

பரிசோதனத்தொடர்—2 ... ... கஅஅ

திரு. நாராயணையங்காரவர்கள், பத்திராசிரியர்.

பெருங்கவிஞர்பிரிவு ... ... உஉக

மஹாவித்துவான்மறைவு ... ... கசடு

திரு. க. வெள்ளைவாரணரவர்கள்.

இளம்பூரண அடிகளும் மணக்குடவரும் ... அகூ

திரு. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப்பிள்ளையவர்கள், B.A., B.L. தமிழாராய்ச்சித்துறைத்தலைவர், சென்னைப்பல்கலைக்கழகம்.

இரங்கற்பாக்கள் .. ... ... கசுஅ

கம்பர்காலம் ... ... ... கூஎ

திருவள்ளுவர்காலம் ... ... டு

பல்லவர்மீது சாசனப்பாடல்கள் ... ருரு

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி–சங.] பார்த்திப-ஞூ கார்த்திகை, மார்கழிமீ [பகுதி-க, உ.
Vol. 43. November '45.—January 1946. No. 1, 2.

## ஒரு துறைக்கோவையாராய்ச்சி

[சஉ-ஆம் தொகுதியின் கடுக-ஆம் பக்கத்தொடர்ச்சி]

"கம்பக் கருணையக் தேனூறு ஞானக் கனியருள்சே
ரும்பர்க் கரசனை யான்ரகு நாத னுயர்வரைவாய்
விம்பக் கனியித ழீர்மணி மார்பில்வெங் கோடுடைய
கும்பக் கரிகொடி தாம்விலக் கீர்மத குஞ்சரமே"

என்பது இக்கோவையின் 25-ஆம் செய்யுளாகும். இச்செய்யுளின் ஈற்றடியுள் இறுதிப்பகுதி, இம்மதுரைத் தமிழ்ச்சங்கத்துள்ளதோரேட்டுப்பிரதியின்மட்டும் 'மதக்குஞ்சரமே' என்று காணப்படுகிறது.

உரைப்பதிப்புள், மேற்குறித்த செய்யுளின் முன்னிரண்டடியுள்,

'கம்பக் கருணையக் தேனூறு ஞானக் கனியருள்சே
ரும்பர்க் கரசனையான் ரகுநாதன்'

என்று பாட்டுடைத்தலைவன் பெருமைபேசும் பகுதிக்கு, அப்பகுதி முழுவதையும் ஒருதொடராக்கி, அத்தொடருள் 'ஞானக்கனி' என்பது சிவபெருமானைக் குறிப்பதாகவும், 'உம்பர்க்கரசு' என்பது இந்திரனைக் குறிப்பதாகவும் கொண்டு, பாட்டுடைத்தலைவனை இந்திரனேடொப்பித்து,

"அசைவற்ற அருளாகிய தேன் சுரக்கின்ற ஞானக்கனியாகிய சிவபெருமானது திருவருள்பெற்ற தேவர்க்கரசனாகிய இந்திரனை நிகர்த்தவனாகிய ரகுநாதன்"

என்று பொருள் வரையப்பட்டுளது.

இங்கே ஞானக்கனியென்னும் தொடர் அறிவாகிய பழம் என்றேனும், அறிவுக்கு நிலைக்களம் என்றேனும் பொருள்படும். இப்பொருளில் அத்தொடர் அறிவுக்கனியாகவோ அல்லது அறிவுக்கு ஆதாரம் (நிலைக்களம்) ஆகவோ உள்ளவரைப் பொதுவாகச் சுட்டிநிற்பதல்லது, சிவபெருமானைமட்டும் சிறப்பாகச்சுட்டி

*

நில்லாது. ஞானக்கனியென்னுந் தொடர்க்குமுன் அமைந்த அடைமொழிகளிலும் அது சிவபெருமானையே சுட்டுமென்பதற்குரிய குறிப்பொன்றும் இல்லை. மேலும், உம்பர்க்கு அரசனையான் என்பது தேவர்க்கு அரசனாகிய இந்திரனை நிகர்த்தவன் என்று பொருள் படுமாயினும், கல்வி அறிவு ஆற்றல் ஆண்மை வீரம் கொடை உலகுகாவல் அறந்தலையளித்தல் அடைந்தார்ப்புரத்தல் ஆதியவற்றால் ஒத்தாரை மிக்காரையில்லாத பெருந்தகையென்று இந்நூலாசிரியர் பாராட்டும் பாட்டுடைத்தலைவனுக்கு அரக்கராலும் அசுரராலும் பிறராலும் தானும் தன்னையடைந்தோரும் நலிவுறும் நிலையுடைய இந்திரனை உவமைகூறுதல் சிறப்பாகாது. அன்றியும், உரையாசிரியர்கருத்தின்படி ஞானக்கனியருள்சேர் உம்பர்க்கரசனையான் என்பது, சிவபெருமானருள்பெற்ற தேவராஜனை நிகர்த்தவன் என்று பொருள்பயந்து பாட்டுடைத்தலைவன்பெருமைகூறியதாக அமையுமாயினும், அவ்விந்திரன் இந்திரபதவிவகித்தவருள் இன்னானென விளங்குமாறின்மையால் அதுவும் இயைபுடையதாயில்லை. ஆகவே உரைப்பதிப்பிற் கண்டபொருள் வலிந்துகொள்ளப் பட்டதாகத்தோன்றுகிறது.

ஆதலால், பாட்டுடைத்தலைவன்பெருமைகூறும் அவ்வடிப் பகுதியிலே கம்பக்கருணையந்தேனூறும் ஞானக்கனி, அருள்சேர் உம்பர்க்கரசனையான், ரகுநாதன் என்று பாட்டுடைத்தலைவன் பெயர் அடுக்கிக்கூறப்பட்டதெனக்கொண்டு,

அசையாநின்ற கருணையாகிய தேன்சுரக்கின்ற
ஞானாகரனும் அருளையுடைய தேவர்க்கரசனாகிய
திருமாலைநிகர்த்தவனும் ஆகிய ரகுநாதன்

என்று பொருளுரைப்பது சிறக்குமென்று தோன்றுகிறது.

இங்கே ஞானக்கனியென்பது ஞானாகரம் என்னும் பொருளில் வந்தது. கனி ஆகரம் என்பன ஒருபொருளன. ஞானம் - அறிவு. கனி - இருப்பிடம். ஞானக்கனி யென்பது அறிவுக்கு உறைவிடமானவன் (ஞானாகரன்) என்று பொருள்பயந்து பாட்டுடைத்தலைவன்பெருமைசுட்டும் சிறப்புப்பெயராய்நின்றது. இப்பாட்டுடைத்தலைவனை இந்நூலுள் மேலும் 67 ஆம் செய்யுளில் 'புகலூர் ஞானாகரன்' என ஆசிரியர் பேசுதலும் இங்கு நோக்கத்தகும். உம்பர்க்கரசனையான் என்பது அருள்சேர் என்ற அடைமொழியால் (இந்திரனைக்குறியாது) திருமாலையே சுட்டுதல் வெளிப்படை. மேலும்,

உலகக்காவல்புரியும் அரசரைக் காவற்கடவுளாய திருமாலாகக் கூறும் கவிமரபும் இங்கு இயைபுடையதாகும். எனவே கருணையங் தேனூறு ஞானக்கனி, அருள்சேர் உம்பர்க்கரசனையான், ரகுநாதன் என்று பாட்டுடைத்தலைவன்பெயர் அடுக்கிவந்ததெனக் கொண்டு உரைப்பதே கவிகருத்தொடுபட்டபொருளென்று தோன்றுகிறது.

இனி, மேற்குறித்த செய்யுளில்,

'விம்பக் கனியிதழீர்! மணிமார்பில் வெங்கோடுடைய
கும்பக்கரிகொடிதாம் விலக்கீர் மதகுஞ்சரமே'

என்பது, நுவல்பொருள் (நாணிக்கண்புதைத்தல்) பற்றியெழுந்த பிற்பகுதியாகும். இப்பகுதி, தலைவி நாணிக் கண்புதைத்துநின்ற நிலையில் தலைவன் அவள் தனயானையால் தனக்குநேரும் இடையூறு நீக்குமாறு வேண்டும் கூற்றாகும். இதனுள் 'மணிமார்பில் வெங்கோடுடையகும்பக்கரிகொடிதாம் விலக்கீர் மதகுஞ்சரமே' என்பது சிலேடையணியமைந்தது. இப்பகுதிக்கு உரைப்பதிப்புள், ஈற்றடியிறுதிப்பகுதியில் 'மதகுஞ்சரமே' என்ற பாடங்கொண்டு,

"அழகிய மார்பில் உள்ள வெவ்விய கொம்புகளையுடைய மத்தகத்தையுடைய யானையானது கொடிதாயிராநின்றது. (ஆதலால்) இந்த மதயானையை விலக்குவீராக"

என்பது வெளிப்படைப்பொருளாகவும்,

"மதகுஞ் சரம் - கண், கும்பக்கரி தனம்; மதகுஞ்சரம் என்பதை மதகும் சரம் எனப் பிரித்து மதகும் பாணமும் ஆகிய இவற்றை என்று பொருள்கொள்க"

என்பது குறிப்புப்பொருளாகவும் காட்டப்பட்டுள்ளன.

மேற்காட்டியவற்றான், வெளிப்படைப்பொருள் ஒருவாறு அமையுமாயினும், குறிப்புப்பொருளிற்காட்டியபடி மதகுஞ்சரம் என்பது கண்ணையுணர்த்திவருதல் யாண்டும் கண்டதில்லை. மேலும், 'மதகுஞ்சரம்' என்பதனை மதகும் சரம் எனப் பிரித்து, 'மதகும் பாணமும் ஆகிய இவற்றை' என்று கொள்வதும் அமைவுடையதாகாது. அன்றியும், யானைக்கியைய வெளிப்படைப்பொருள் விரித்தது போல நுவல்பொருட்கியையக் குறிப்புப்பொருள் விரிக்கப்படவுமில்லை. இங்கு மதகுஞ்சரம் என்ற பாடங்கொண்டுவேறுற்றுக் குறிப்புப்பொருள் விரித்தலும் இயலாது. ஏட்டிலுள்ள 'மதக் குஞ்சரமே' என்ற பாடமும், 'மதகுஞ்சரம்' என்ற பாடம்போல வெளிப்படைப்பொருளில் இயைவதாயினும், குறிப்புப்பொருளில்

இயைவதாயில்லை. ஆதலால் மேற்காட்டிய பாட்டினிறுதி பிழைபட்டிருக்கவேண்டுமென்றுகொண்டு ஊன்றிநோக்கியதில் அது, 'மதர்க் குஞ்சரமே' என்று இருந்திருக்கவேண்டுமென்று தோன்றிற்று.

ஊகித்துக்கண்ட மதர்க்குஞ்சரமே என்ற பாடங்கொள்ளின் அப்பகுதிக்கு, "மார்பிலே மணியினையும் வெய்ய கொம்புகளையும் மத்தகத்தையும் உடைய (இந்த) யானையானது கொடியதாகும். (இம்மதகளிறு என்னை நலியாதவாறு) ஒளிவிடுகின்ற அம்பினை (விலக்காது) ஏவுவீராக" என்று வெளிப்படைப்பொருளும்,

"ஆரம்பூண்ட மார்பில் உள்ள விரும்பத்தக்க தொய்யிற்கோலம் வரைந்த மத்தகத்தையுடைய (யானையனைய இந்தத்) தனமானது கொடிதாயிராநின்றது. (அதனுல் யான் வருந்தாவண்ணம்) ஒளிவிடுகின்ற சரம்போன்ற கண்ணைப்புதையாது நோக்குவீராக" என்று குறிப்புப்பொருளும் இனிது அமைதல் காணலாம்.

இங்கே கரி, சரம் என்பன உவமவாகுபெயராய் முறையே தனத்தினையும் கண்ணினையும் உணர்த்திநின்றன. மணி—1 யானை முதுகிற்றொங்கும் மணி, 2 ஆரம். கோடு-1 கொம்பு, 2 ரேகை: என மணி முதலியவை இருபொருள்பயந்து வெளிப்படை குறிப்பாகிய இரண்டிடத்தும் இயைந்துநின்றன. மதர்த்தல் - ஒளிவிடுதல்.

இவ்வாறு நவல்பொருள்விரிக்கும் பிற்பகுதிக்குச் சிலேடைவாய்பாட்டால் வெளிப்படையும் குறிப்புமாக விரித்துரைத்த பொருளே கவிகருத்தொடுபட்டதாகும். அதற்கியைய ஊகித்துக் கண்ட மதர்க்குஞ்சரமே என்ற பாடமே ஆசிரியர்கொண்ட பழம்பாடமென்றும், அப்பாடமே பின்பொருளறியும் ஆற்றலற்ற ஏடெழுதுவோரால் மதக்குஞ்சரமே மதகுஞ்சரமே என மாறிப் பிழைபட்டதென்றும் கொள்ளக்கிடக்கிறது.

[தொடரும்]

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

# திருவள்ளுவர் காலம்*

சாதி மதபேதங்களை மறந்து உண்மையாக ஒன்றை மதிப்பிடக் காண்பது மிகவும் அருமை. அங்ஙனம் மதிப்பிட வல்லவர்கள் தமிழர்கள் என்பதற்கு அழியாத ஒரு சான்று உண்டு. அது தான் திருக்குறளைப்பற்றியது. திருக்குறளாசிரியர் இழிவாகக் கருதப்பட்ட வள்ளுவர்குலத்தைச் சார்ந்தவர். அவரது மதம் ஜைனமதம். ஆனால், தமிழ்மக்கள் இவ்விரண்டையும் சிறிதும் கருதாதபடி அவரது பெரும்புலமையொன்றையே கருதி அவரை உலகத்துப் பேரறிஞர்களுள் ஒருவர் என்று பாராட்டிவருகிறார்கள். சீரிய இலட்சியங்களைச் சுருங்கிய சொற்களால், எளிமையாய் இனிமையாய்க் கூறுதலில் வள்ளுவரோடு ஒத்த சிறப்புடையவர்களைக்காணுதல் அரிது. அவருடைய இனிய திருக்குறளைக்குறித்து,

'சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து—'

என்று ஒரு பண்டைப்புலவர் அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார். வள்ளுவர் தாமே உயர்ந்த நூல்களின் இயல்பைக் குறித்து 'நவில்தொறும் நூல் - நயம் போலும்' என்கிறார். இச்சிறந்த இயல்பு அவருடைய நூலிலே அமைந்துள்ளமை தமிழ்மக்கள் நன்கு அறிந்ததே.

இவரைப்பற்றிப் பற்பலகதைகள் உள்ளனவேயன்றி உண்மை வரலாறு யாதும் காணப்படவில்லை. எக்காலத்தில் இவர் வாழ்ந்தார் என்பதுகூட விவாதவிஷயமாயுள்ளது. இதற்குரிய சான்றுகளும் மிகமிகச் சிலவாகவுள்ளன. ஒருசிலர் வள்ளுவரதுநண்பர் ஏலேலசிங்கர் என்ற கதையை ஆதாரமாகக்கொண்டு, இவ் ஏலேலசிங்கர் மகாவம்சத்திற் கூறப்படும் ஏலாரா என்பவரே எனக் கருதினர். ஏலாராவின் காலம் கி.மு. 2ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியென இலங்கைச்சரித்திரங்கள் கூறுதலால், வள்ளுவரும் இக்காலத்தினரே என்று கொண்டனர். மனுநீதிகண்டசோழன் தன் மகன்மீது

*இது, சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர் திரு. ராவ்ஸாஹிப். S வையாபுரிப்பிள்ளை B.A., B.L. அவர்கள் 8-10-45-ல் சென்னை ரேடியோநிலையத்திற் பேசியது; அந்நிலயத்தார் அநுமதிபெற்று வெளியிடப்பட்டது.

தேரூர்ந்த கதை ஏலாராவிற்கு ஏற்றிச்சொல்லப்பட்டிருக்கிறது. பின்னர், இது கதைபற்றிய சான்று என ஒதுக்கிவிட்டு, நூற் சான்றுகொண்டு காலந்துணிய முற்பட்டனர். சிலப்பதிகாரத்தில்,

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளை'

(கட்டுரைகாதை - வெண்பா)

என்று ஒரு குறள் எடுத்தாளப்படுகிறது. மணிமேகலையில்,

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை' என்ற அப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய் (22, 59-61)

என் வள்ளுவர் குறிப்பிடப்படுகிறார். சிலப்பதிகாரத்தில் கயவாகு என்ற இலங்கையரசன் கூறப்படுகின்றான். அவன் காலமாகிய கி. பி. 2-ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியே (கி. பி. 173 - 195) சிலப்பதிகார காலமாகும். எனவே, 2-ஆம் நூற்றாண்டின் கடைப் பகுதிக்குமுன்பாகத் திருவள்ளுவர் வாழ்ந்தவராதல்வேண்டும். சிலப்பதிகாரத்தோடு சமகாலத்தில் இயற்றப்பட்ட மணிமேகலை கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் என்ற கடைச்சங்கப்புலவரால் இயற்றப்பட்டது. எனவே, கடைச்சங்ககாலமாகிய 2-ஆம் நூற் றாண்டிற்கு முற்பட்டவராவர் வள்ளுவர். ஆதலால், வள்ளுவரை கி. பி. முதல்நூற்றாண்டினர் என்று கொள்வதே பொருத்தம்: என்று பலரும் கருதிவந்தனர். ஆனால், சிலப்பதிகாரம் மணிமேகலை இவற்றின் காலம் கி. பி. 6 அல்லது 7-ஆம் நூற்றாண்டாக இருக்க வேண்டும் என்ற கொள்கை இப்போது வலியுற்றுவருகின்றது. அதற்குரிய சான்றுகளும் மிகப் பலவாய்த் தமிழ்நாட்டுச் சரிதத் தோடும் இலக்கியவரலாற்றோடும் ஒத்தனவாயுள்ளன. எனவே, இக்காப்பியங்களை அடிப்படையாகக்கொண்டு துணிந்த காலவரை யறை ஒப்புக்கொள்ளத்தக்கதன்று.

அங்ஙனமாயின் காலவரையறைசெய்வதற்கு வேறு சான்று கள் உண்டா?

திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கைச் சார்ந்தது. இக் கீழ்க் கணக்குநூல்கள் இன்ன என்பது,

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்

இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.

என்ற செய்யுளால் அறியலாகும். இதில், திருக்குறள் என்ற பெயர் காணப்படவில்லையே என்று சிலர் ஐயுறலாம். 'முப்பால்' என்று இதில் வருவது திருக்குறள் நூலைக் குறித்ததேயாகும். திருக்குறளுக்கு 'முப்பால்' என்பது ஒரு பெயர். திருவள்ளுவமாலையியற்றிய புலவர்களுள் 14 புலவர்கள் 'முப்பால்' என்றே திருக்குறளை வழங்கியுள்ளார்கள். இலக்கணவிளக்கப்பாட்டியலின் உரையில் 'வள்ளுவர் முப்பால்' (சூ 57-உரை) என வருகின்றது. திருக்குறளுக்கு ஒன்பதுபெயர்கள் படிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று 'முப்பால்' என்பதாகும். இவற்றால், திருக்குறளையே 'முப்பால்' என நம் முன்னோர்கள் வழங்கினார்கள் என்பது வெளிப்படை.

திருக்குறள் கீழ்க்கணக்குநூல்களில் ஒன்று என்பதற்கு மேற்காட்டிய சான்றுகளேயன்றி வேறு சான்றுகளும் உள்ளன. தொல்காப்பியத்திற்கு உரையிட்ட பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் (செய்யுள் 547-உரை) கீழ்க்கணக்கில் இரண்டடிச்செய்யுள் உள்ளது என்று குறிப்பிட்டுத் திருக்குறளிலிருந்து உதாரணமுங் காட்டினர். யாப்பருங்கலக்காரிகையின் பழைய உரைகாரர் 'திருவள்ளுவப்பயன் நாலடிநானூறு முதலாய கீழ்க்கணக்குள்ளும்' என்று மிகத் தெளிவாக எழுதியிருக்கின்றார். எனவே, திருக்குறள் கீழ்க்கணக்குநூல்களில் ஒன்று என்பது ஐயுறமுடியாத ஓர் உண்மையாகும்.

கீழ்க்கணக்குநூல்கள் சங்க இலக்கியங்களுக்கு மிகவும் பிற்பட்டவை. இக்கொள்கைதான் தொன்றுதொட்டு வழங்கிவருவது. நக்கீரர் இயற்றிய களவியலுரையில் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் பாடிய நூல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள், கீழ்க்கணக்குநூல்கள் காணப்படவில்லை. நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் கீழ்க்கணக்குநூல்கள் முதலியன இயற்றியவர்களைப் 'பிற்சான்றோர்' என்று குறிப்பிடுகின்றனர். இதுவும், அவர்கள் சங்கத்துச் சான்றோருக்குப் பிற்பட்டவர்கள் என்பதை வலியுறுத்துகிறது.

மேலும், சங்கப்புலவர்கள் வரிசையில் கீழ்க்கணக்குநூல்களின் ஆசிரியர்பெயர்கள் காணப்படவில்லை. கபிலர், பொய்கையார் என்ற பெயர்கள் இருவகை நூல்களுக்கும் பொதுவாயிருப்பினும் இப் பெயர்கள் வேறுவேறு ஆசிரியர்களைக் குறிப்பன என்று கொள் ளுதலே தகுதியாகும். முடிவாக, சங்ககாலச்செய்திகள்சில கீழ்க் கணக்குநூல்களிற் பண்டைக்காலத்தில் நிகழ்ந்தனவாகக்குறிப் பிடப்படுகின்றன. உதாரணமாக, பாரி முல்லைக்குத் தேர் அளித்த தும் பேகன் மயிலுக்குப் போர்வை அளித்ததும் சங்ககாலச் செய்திகள். இவை,

'முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை அளித்தாரைக் கேட்டறிதும்—'

என்று பழமொழி என்னும் கீழ்க்கணக்குநூலில் வருகின்றன. பழைய உரைகாரர் 'தொல்லை அளித்தாரை' என்பதற்குப் 'பண்டு கொடுத்தாரை' என்று உரையெழுதினர். மேலும், சங்ககாலத்து இன்றிப் பிற்பட்டு எழுந்த சரித்திரச்செய்தியுங்கூட மிக முற்பட்ட காலத்துச்செய்தியாக இப்பழமொழி அறிவிக்கின்றது. இச்செய்தி மனுநீதிகண்டசோழனைப்பற்றியது. எனவே, பழமொழிமுதலிய கீழ்க்கணக்குநூல்கள் மிகமிகப் பிற்பட்டகாலத்துத் தோன்றியன என்பது உறுதியாகும். ஆதலால், சங்கஇலக்கியகாலத்திற்கும் கீழ்க் கணக்குநூல்களின்காலத்திற்கும் இடையே 3 அல்லது 4 நூற் றுண்டுகள் சென்றிருத்தல்வேண்டுமென ஒருவாறு ஊகிக்கலாம்.

இவ்வூகத்தைக் கீழ்க்கணக்குநூல்களைச்சார்ந்த நாலடியிலுள்ள இரண்டுசெய்யுட்கள் நன்றாக வலியுறுத்துகின்றன.

'பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச்சோ றார்வர் கயவர் - கருனையைப்
பேரும் அறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும்' (200)

'மல்லன்மா ஞாலத்து வாழ்ப வருளெல்லாஞ்
செல்வ ரெனினுங் கொடாதவர் நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார்' (296)

இச் செய்யுட்களிற் குறிப்பிடப்பட்ட 'முத்தரையர்' என்பவர் கொடையிற் சிறந்தவர். முற்காலத்தில் முத்தரையர் என்ற ஒரு

குறுநிலமன்னர்பரம்பரை இருந்தது. இவர்கள் தங்கள் போர்த் திறமையாலும் கொடைமேம்பாட்டினாலும் கி. பி. 7-ம் நூற்றாண்டிலே பிரபலமடைந்திருந்தார்கள். இந்நூற்றாண்டின் இடைப்பகுதியில் அரசுபுரிந்த முதற் பரமேசுவரவர்மபல்லவனுக்குப் 'பெரும்பிடுகு' என்று ஒரு பெயர் வழங்கிவந்தது. இப்பல்லவன்கீழ்க் குறுநிலமன்னனாயிருந்த முத்தரையனும் இப்பெயரே சிறப்புப் பெயராகப் 'பெரும்பிடுகுமுத்தரையன்' என்று வழங்கப்பட்டான். நாலடியாரின் பழையவுரை 'பெருமுத்தரையர் என்னும் சிறப்புப் பெயர்பெற்ற செல்வர்' என்று கூறுகிறது. நாலடியாரிற் குறிக்கப் பட்ட பெருமுத்தரையன் பெரும்பிடுகுமுத்தரையனே எனக் கொள்ளலாம். இவன் காலம் 7-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகவே, நாலடியாரும் சுமார் கி. பி. 650-ல் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

கடைச்சங்ககாலம் கி. பி. 2-ம் நூற்றாண்டின் இறுதியென்றால், அதற்கும் இக்காலத்திற்கும் சுமார் 4 நூற்றாண்டுகள் இடைப்பட்டிருந்தல் காணலாம். நாலடியாரை ஒழிந்த ஏனைய கீழ்க்கணக்கு நூல்கள் கி. பி. 650-ஐ ஒட்டி முன்பின்னாகத் தோன்றியிருத்தல் வேண்டும் என்றும் கொள்ளலாம். அதாவது, சில கீழ்க்கணக்கு நூல்கள் கி. பி. 650-க்கு முற்பட்டகாலத்தும் சில அதற்குப் பிற்பட்டகாலத்தும் தோன்றின.

(நாலடியாருக்குத் திருக்குறள் முற்பட்டதாகும். ஏனெனில், திருக்குறளிலுள்ள கருத்துக்களும் தொடர்களும் நாலடியாரிலும் காணப்படுகின்றன.) உதாரணம்:—

> 'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
> கொள்வர் பயன்றெரி வார்' (104)

என்ற திருக்குறள்,

> 'தினையனைத்தே யாயினும் செய்தநன்றுண் டாயிற்
> பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர்' (344)

என்ற நாலடிக்கு மூலமாதல்வேண்டும்.

> 'நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
> பின்னீர பேதையார் நட்பு' (782)

என்ற திருக்குறளின் கருத்து,

'பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு' (125)

என்ற நாலடிச்செய்யுளில் வந்துள்ளது. இங்ஙனமே,

'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு' (338)

என்ற திருக்குறட் கருத்து,

'சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து' (30)

என்ற நாலடியிற் காணலாம்

'ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வியர்ப்பக்
கூடலிற் றோன்றிய உப்பு' (1328)

'ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்' (1330)

என்றவற்றின் கருத்துக்கள்,

'ஊடி, உயங்காக்கால் உப்பின்றாம் காமம்' (391)

என்ற நாலடியில் அமைந்துள்ளன. இங்ஙனமே,

'கொன்றன்ன இன்னா செயினும்' (குறள்—109)

என்ற தொடர் நாலடியிலும் (186) வருகின்றது. இவற்றையெல்லாம் நோக்குமிடத்து வள்ளுவப்பயன் நாலடியாருக்கு முற்பட்டது என்பது தெளிவாகும். எனவே, கி. பி. 600-ஐ வள்ளுவர்காலத்தின்கீழ் எல்லையாக நாம் கொள்ளலாம்.

இனி, தொல்காப்பியனாருக்குப் பிற்பட்டவர் வள்ளுவர் என்பதும் நாம் ஊகிக்கத்தக்கதே. தொல்காப்பியத்தில்,

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப' (செய்—178)

என வருகின்றது. இக்கருத்தும் தொடரும்,

'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்' (28)

என்ற குறளிற் காணலாம். அன்றியும், தொல்காப்பியர்காலத்துக் 'கள்' என்ற பன்மைவிகுதி அஃறிணைக்குமட்டும் உரியதாயிருந்தது. உயர்திணைப்பெயர்களுக்கு இவ்விகுதி வருதல் இல்லை. தற்காலத்தில் 'அவர்கள்' 'மறவர்கள்' 'மன்னர்கள்' என்று சாதாரணமாக வழங்குவோம். இந்த வழக்கு தொல்காப்பியர்காலத்திற்குப் பின் தோன்றியதாகும். இப் பிற்பட்டவழக்கைத் திருவள்ளுவர் இரண்டு இடங்களில் எடுத்தாளுகின்றார். 'பூரியர்களாழும் அளறு' (919) என்றும், 'மறந்தார்கொல் மற்றையவர்கள்தவம்' (263) என்றும் அவர் திருக்குறளில் வந்துள்ளது. இவ்வாறே எதிர்காலத்துத் தன்மையொருமையில் 'அல்' என்ற விகுதிமாத்திரம் வரும் என்று தொல்காப்பியர் கூறினர். உதாரணம்:—வருவல், உண்பல் என்பனவாம். வள்ளுவர் 'அன்' என்ற விகுதியையும் வழங்குகிறார்.

'இரப்பன் இரப்பாரையெல்லாம்' (1067)

என்ற திருக்குறள் உதாரணம். இந்த அன் - ஈறுபற்றி இளம்பூரணர் என்ற உரையாசிரியர் கூறுவது கவனிக்கத்தக்கது. 'இப்பொழுது இதனை உண்பன், தின்பன் என அன் - ஈறாக வழங்குப' என்று எழுதினர். இதனால், அன் - ஈற்றை வழங்கும் திருக்குறள் தொல்காப்பியத்திற்கு மிகப் பிற்பட்டதென்பது எளிதில் உணரலாகும். தொல்காப்பியரதுகாலம் பலகாரணங்களால் கி. பி. 3-ஆம் நூற்றாண்டு என்று கொள்ளத்தக்கது. ஆகவே, வள்ளுவரதுகாலம் கி. பி. 3-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதென்பது தெளிவு.

கி. பி. 3-ஆம் நூற்றாண்டிற்கு எவ்வளவுகாலம் பிற்பட்டுத் திருக்குறள் தோன்றியிருத்தல்வேண்டும்?

இவ்வினாவிற்கு விடைவேண்டுமாயின், தமிழ்மொழியின் வரலாற்றை நாம் நோக்குதல்வேண்டும். முன்னமே 'கள்' 'அன்' என்ற விகுதிகளைக் கூறினோம். இவைகளையொப்பப் பல புது விகுதிகளும் சொல்வடிவங்களும் வள்ளுவர்காலத்தில் தமிழிற் புகுந்துவிட்டன. 'அல்லால்' என்ற வடிவம்,

'வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குத் துய்த்தல் அரிது' (377)

என்பது முதலாக 12 இடங்களில் வந்துள்ளது. 'சூழாமல்' (1024), 'செய்யாமல்' (101, 313) என்ற 'மல்' விகுதியும் புதுவழக்கே. அல்லனேல் (386), இன்றேல் (556), உண்டேல் (368), செய்வானேல் (655), வல்லையேல் (118) என்பவற்றிற் காணப்படும் 'எல்' விகுதியும் புதியதொன்றே. இவைகளேயன்றி, 'இல்லதென் இல்லவள் மாண்பானால்' (53) என்றவிடத்து 'ஆனால்' என்ற சொல் வருகின்றது.

'பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து' (1229)

என்ற இடத்திற்போல, 'பொழுது' என்பதன் பிற்பட்ட வடிவமாகிய 'போழ்து' என்பது ஐந்து இடங்களில் (412, 539, 569, 930, 1229) வழங்கியுள்ளது. இவற்றுள், 'ஆனால்' என்பதன் சொல்லமைதியை நோக்குவோம். 'ஆயினால்' என்பதுதான் அதன் மூலவடிவம். இவ்வடிவத்தில் 'ஆ' என்பது முதனிலை; 'இன்' என்பது ஓர் எச்ச விகுதி; 'ஆல்' என்பது பிறிதோர் எச்சவிகுதி; 'ஆயின்' என்பதே 'ஆயினால்' என்பதன் பொருளை உணர்த்தவல்லது. இவ்வாறாகவும், விகுதிமேல்விகுதி சேர்ந்து அமைந்தது இம் மூலவடிவம். பின்னர் 'போயினான் - போனான்', 'ஆயினான்-ஆனான்' என வருதல் போல, 'இன்' மறைந்து 'ஆனால்' என நின்றது. இவ்வளவு அமைதி வேறுபாடு இச்சொல்லில் இருப்பதால் இது மிகமிகப் பிற்பட்ட வழக்கென்பது எளிதில் அறியலாகும்.

இங்கே, காட்டிய புதுவழக்குக்களெல்லாம் மிகுதியாய்வழங்கியமை நாயன்மார் ஆழ்வார்கள் காலத்தேயாகும். இக்காலம் கி. பி. 600-ல் தொடங்குகிறதென்று பொதுவாகக்கொள்ளலாம். இப் புதுவழக்குக்கள் வள்ளுவர்காலத்தில் புகத்தொடங்கின என்று நாம் ஊகிக்கக் கிடத்தலால் நாயன்மார்காலத்திற்குச் சற்று முன்பு, சுமார் கி. பி. 500-ல், வள்ளுவர் வாழ்ந்து, தம் பெருநூலை இயற்றினர் என்று துணிதல் பெரிதும் பொருந்துவதாகும்.

இம்முடிபு பிறிதொருவகைச்சான்றினாலும் உறுதியடைகிறது. வள்ளுவர்நூலில் பாக்கியம் (1141), பூசனை (18), மந்திரி (639),

ஆசாரம் 1075) முதலிய வடசொற்கள் எடுத்தாளப்படுகின்றன. இத் தனிமொழிகளேயன்றி, 'ஆதிபகவன்' என்ற இருமொழித் தொடரும் அந்நூலில் வந்துள்ளமை அனைவரும் அறிவர். அன்றியும், 'ஒருவந்தம்' என்ற சொல் இரண்டு குறள்களில் (563, 593) வந்துள்ளன. இச்சொல்லில் 'ஒரு' என்பது தமிழ்; 'அந்தம்' என்பது வடசொல். 'ஏகாந்தம்' என்பதற்குரிய கலவைச்சொல்லாக (Hybrid) இது அமைந்துள்ளது. இங்குக் காட்டியவையெல்லாம் வடசொற்களை யெடுத்தாளுதலில் வள்ளுவர் விரிந்த மனப்பான்மை யுடையவர் என்பதைத் தெரிவிக்கின்றன. இம் மனப்பான்மை சங்ககாலத்திற் சுருங்க அமைந்து நாயன்மார்காலத்திற் பரந்து விட்டது.

மேலும், வடமொழிச்சொற்களையேயன்றி, வடமொழிக்கருத்துக்களையும் வள்ளுவர் எடுத்தாண்டுள்ளார். 'ஸம்ஸாரஸாகரம்' என்பதனைப் 'பிறவிப்பெருங்கடல்' (10) என்றனர். நால்வகை ஆச்சிரமங்களையும்,

'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை' (41)

என்ற குறளிற் கூறினர். பஞ்சமகாயக்ஞங்களை,

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை' (43)

என்ற குறளிற் குறித்தனர். சாங்கிய நூற்கருத்துக்களை,

'சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு' (27)

என்ற குறளில் அமைத்தனர். அவித்தை பிறப்பிற்குக் காரணம் என்பதனை,

'பிறப்பென்னும் பேதைமை' (358)

என்ற தொடராற் சுட்டினர். அகங்கார மமகாரங்களை,

'யான் என தென்னும் செருக்கு' (346)

என்று மொழிபெயர்த்தனர். இவ்வாறாக வடநூற்கருத்துக்களை ஆண்டதேயன்றி, வடமொழியிலுள்ள சில ஸ்மிருதிகளையும் இவர் அறத்துப்பாலிற் பின்பற்றிச்செல்லுகின்றனர். மனு,

'நூறாண்டு பரிமேதம் செய்தானுக்கும் சாந்துணையும்
புலால் மறுத்தானுக்கும் பயன் ஒத்தன' (அத் V-சுலோ 53)

என்று கூறியதனை,

'அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று' (259)

என்ற குறளில் மிக்க ஆற்றலுடன் அமைத்துள்ளனர். இதே ஸ்மிருதியில்,

'தொடுகருவிகொண்டு பூமியைத் தோண்டுதலால்
ஒருவன் நீர்பெறுதல்போலக் குருவினிடத்துள்ள
வித்தையை அவர்க்குச் சேவைபுரிந்து மாணவகன்
பெறுகிறான்' (அத் - II - சுலோ - 218)

என்று வரும் கருத்து,

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு' (396)

என்ற குறளில் மிக்க நயம்பட எடுத்துரைக்கப்படுகின்றது. இங்ஙனம் பல. திருவள்ளுவமாலையில் ஒரு செய்யுளில்,

'மனு, பண்டைமறை நேர்வன மற்றில்லை நிகர்'

என்று கூறியது, இங்குக் காட்டியவைபோன்ற கருத்தொற்றுமைகளைநோக்கியே யாகும்.

அறத்துப்பாலில் மனுமுதலிய ஸ்மிருதிகளைப் பின்பற்றியது போலப் பொருட்பாலிலும் சாணக்கியரது அர்த்தசாஸ்திரம், காமந்தகம் முதலிய நீதிநூல்களை வள்ளுவர் பின்பற்றியிருக்கிறார். அரசர்க்குரிய அங்கங்கள் ஏழு என்ற அர்த்தசாஸ்திரக்கொள்கையை உட்கொண்டு, (காமந்தகம் IV, 1)

'படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு' (381)

என்று கூறினர். அரசனுக்குரிய பொருள்கள் இன்ன என்பதை,

'உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்' (756).

என்ற குறள் தெரிவிக்கின்றது. இதுவும் வடநூற்கருத்தே. இங்கு வந்துள்ள 'உல்கு' என்பது 'சுல்கம்' என்ற வடமொழியின் திரிபே யாகும். இவ்வாறே, அரண்களின் இயல்பும் ஒற்றரியல்பும் தூதரியல்பும் வடமொழி நீதிநூற்கருத்துக்களையே பின்பற்றியன. அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை,

'அறம் பொருளின்பம் உயிரச்சம் நான்கின்
திறம் தெரிந்து தேறப் படும்' (501)

என்ற குறள் கூறுகிறது. இதனைச் சாணக்கியர் தமது அர்த்த சாஸ்திரத்தில் (அதிகாரணம் I அத்தியாயம் 10) உபதை என்ற பெயரால் விரிவாகக் கூறியுள்ளார். அரசனுக்குரிய அறுவகைக் குற்றங்களையும்,

'செருக்கும் சினமும் சிறுமையும் இல்லாப்
பெருக்கம் பெருமித நீர்த்து' (431)

'இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு' (432)

என்ற இரண்டு குறள்களிற் காணலாம். இவற்றை வடநூலார், காமம் குரோதம் லோபம் மானம் மதம் ஹர்ஷம் என்று பெயரிட்டு அரிஷட்வர்க்கம் என வழங்குவர். கௌடில்யர் அர்த்த சாஸ்திரத்திலும் (III. இந்திரியஜயப்பிரகாரணம்) காமந்தகம் (I, 57) முதலியவற்றிலும் இவ்வாறு வந்துள்ளது. பொருட்பாலில் அங்கவியலின் இறுதியிலுள்ள 'மருந்து' என்னும் அதிகாரம் வடமொழியிலுள்ள ஆயுர்வேத நூல்களைப் பின்பற்றியதாகும். இது, 'வளிமுதலா எண்ணிய மூன்று' (941) என வருதலால் அறியப்படும். அன்றியும்,

'உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பானாற் கூற்றே மருந்து' (950)

என்ற குறளுக்குப் பரிமேலழகர் எழுதியுள்ள உரையினால் மேற்கூறியது உண்மை என்பது நன்றாகப் புலப்படும்.

இங்ஙனமே, காமத்துப்பால் வாத்ஸ்யாயனரது காமசூத்திரத்தைப் பின்பற்றியதென்று பரிமேலழகர் கூறினர்.

'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள' (1101)

என்ற குறள் காமசூத்திரத்தை (I, 2, 11) அருமையாய் அமைத்துக் கூறுகிறது.

மேற்காட்டிய வடமொழிநூல்களுள் சாணக்கியர் அர்த்த சாஸ்திரத்தின்காலம்* சுமார் கி. பி. 300 என்றும், வாத்ஸ்யாயனர் காமசூத்திரத்தின்காலம் சுமார் கி. பி. 400 என்றும் ஆசிரியர் பேரிடேல் கீத் (A History of Sanskrit Literature p. 461) கூறினர். எனவே, திருக்குறளை இயற்றிய வள்ளுவர் கி. பி. 5-ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் என்று கொள்வது மிகப் பொருத்தமாதல் காணலாம்.

இனி, வள்ளுவரதுகாலத்தின் சிறப்பியல்புகளைச் சிறிது நோக்குதல்வேண்டும். தமிழ்மொழியின் நிலையை எடுத்துக்கொண்டால் சங்ககாலத்துத் தமிழினின்றும் சிறிதளவு வேறுபட்டு நாயன்மார், ஆழ்வாராதியர்களுடைய தமிழோடு ஓரளவு ஒத்ததாக வள்ளுவர் தமிழ் உள்ளது. இடைக்காலத் தமிழின் முதற்படி என்று நாம் இவர்தமிழைக் குறிக்கலாம். இதற்குரிய பலஇயல்புகளும் வள்ளுவர் நூலிற் காணக்கிடக்கின்றன.

வள்ளுவர்காலத்துத் தமிழ்நாடு சிறந்த இலட்சியங்களையுடையதாய் விளங்கியமை புலனாகும். ஒழுக்கநெறியானது இவரால் வற்புறுத்தப்படுகிறது. இவர்காலத்திற்குமுன்புள்ள சங்ககாலத்தில் மக்கள் லௌகிகத்தில் ஈடுபட்டவர்களாய்ச் சாமானிய அறங்களைக் கைக்கொண்டவர்களாய் இருந்தனர். போர்செய்து புகழ் வளர்ப்பதே தமது வாழ்வின் பெருநோக்கமாகக் கொண்டனர். இந்நோக்கத்திற்கு அக்காலத்துப் பரவத்தொடங்கிய வைதிகசமயமும் உடன்பட்டிருந்தது; இராயசூயயாகம், அசுவமேதயாகம் முதலியவற்றைப் புரிவதில் அரசர்களுக்கு ஊக்கம் அளித்து

* சந்த்ரகுப்த மௌரியன்காலத்தில் சாணக்கியர் தம் நூலை யியற்றினர் எனப் பலரும் கொள்வர். இக்கொள்கை ஒப்புக்கொள்ளத்தக்கதன்றெனத் தக்க காரணங்கள்காட்டி மறுக்கப்பட்டுளது.

வந்தது. ஆனால், ஜைனசமயம் இதனை அக்காலத்தே எதிர்த்து வந்தது என்று சொல்லலாம். கொல்லாமைமுதலிய கொள்கைகளை அது மிகவும் போற்றிவந்தது; நல்லொழுக்கத்தின் அவசியத்தை அறிவுறுத்திவந்தது. சாமானிய லௌகிகநிலையிலிருந்து அதனினும் மேம்பட்ட ஒழுக்கநிலையை நாட்டிற் பரப்புவதற்கு ஜைன சமயத்தவர்கள் மிகவும் முயன்றார்கள். அவ்வாறு முயன்று அம் முயற்சியாற் கனிந்த கனியே வள்ளுவரது திருக்குறள் என்று கூறுதல்வேண்டும். வள்ளுவர்காலத்தும் அவர்க்குப் பின்பும் செழித்தோங்கிய சமயக்கிளர்ச்சிக்கு ஆதாரமாக இவர் கூறிய ஒழுக்கநூல் அமைந்துவிட்டது. தமிழ்மக்கள் உள்ளத்தை இவரைப்போலக் கவர்ந்து தம்வசமாக்கியவர்கள் யாரும் இல்லையென்றே சொல்லத் தோன்றுகிறது.

இவர்காலத்துக் கல்விநிலையை நோக்கினால் அதுவும் பெருஞ் சிறப்புடையதாகவே காணப்படுகிறது. பாரதகண்டம் முழுமையும் போற்றும் பெருமையினாலும், ரிஷிகள் முதலியோர் நூல் இயற்றிய அருமையினாலும், நமது பாரதபூமியில் பலதேசங்களிலுமுள்ளவர்கள் பலதுறைகளிலும் நூல்கள் இயற்றிய சிறப்பினாலும், பெரும் புகழெய்திய வடமொழி நமது தாய்மொழிக்குத் துணையாய் உதவி புரிந்துவந்தது. தமிழ்மக்களது அறிவு வளம்படுவதற்குச் சிறந்த கருவியாக அவ்வடமொழிநூல்கள் இருந்தன. அவற்றை நன்கு பயன்படுத்தவேண்டும் காலமாக இருந்தது வள்ளுவரதுகாலம். ஆகவே, அக்காலத்துத் தமிழ்மக்கள் பரந்துபட்ட கல்வியறிவிற் பெரிதும் ஈடுபட்டவர்களாயிருந்தனர். எனவே, வள்ளுவரது காலம் தமிழ்மக்கள்சரிதத்தில் மிகவும் பெருமைபெற்று விளங்கிய காலம் என்று நாம் சொல்லலாம்.

# கல்வெட்டுக்களால் அறியப்பெறும் மூன்று தமிழ்நூல்கள்

திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள்,

ஆசிரியர், அண்ணாமலைபல்கலைக்கழகம்.

நம் தமிழகத்திலுள்ள திருக்கோயில்களில் வரையப்பெற்றுள்ள கல்வெட்டுக்களை ஆராயுங்கால் முற்காலத்தில் நிலவிய சில தமிழ் நூல்களின்பெயர்களும் அந்நூல்களை இயற்றிய புலவர்பெருமக்கள் செய்திகளும் வெளியாகின்றன. அவற்றையெல்லாம், ராவ்சாகிப் திருவாளர் மு. இராகவையங்காரவர்கள், சாசனத்தமிழ்க்கவிசரிதம் என்னும் அரிய ஆராய்ச்சிநூலில் வெளியிட்டுள்ளார்கள். அரசாங்கத்தார் அண்மையில் வெளியிட்ட கல்வெட்டிலாகாவின் ஆண்டு அறிக்கைகளின்மூலம் அறியக்கிடக்கும் மூன்று தமிழ்நூல்களைப் பற்றியசெய்திகள், தமிழ் இலக்கிய வரலாற்றாராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் என்று கருதி, அவற்றை அடியிற் குறிக்கின்றேன்.

1. திருப்பாலைப்பந்தல் உலா:— திருப்பாலைப்பந்தல் என்பது தென்னார்க்காடுஜில்லா திருக்கோவலூர்த்தாலுகாவிலுள்ள ஓர் ஊர். அவ்வூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது எல்லப்ப நயினார் என்னும் புலவர்பெருமானால் பாடப்பெற்றது இவ்வுலா என்பது அவ்வூர்க் கோயிற் கருப்பஇல்லின் தென்சுவரில் வரையப்பெற்றுள்ள ஒரு கல்வெட்டாற் புலப்படுகின்றது (Inscription No. 401 of 1938). உலா இயற்றி அரங்கேற்றிய இவ்வாசிரியர்க்குக் கோயில் அதிகாரிகள் சில நிலங்களும் ஒரு மனையும் அளித்ததோடு இறைவர்க்குப் படைக்கப்பெறுந் திருவமுதில் ஒருபகுதியை நாள்தோறும் வழங்கிவருமாறுசெய்திருந்தமையும் அக்கல்வெட்டால் அறியப்படுகின்றது. அன்றியும், அக்கல்வெட்டு இவ்வாசிரியர் உண்ணாமுலைநயினார் என்பவருடைய புதல்வர் என்றும் காலிங்கராயர் என்ற பட்டமுடையவர் என்றும் கூறுகின்றது. இவர் இயற்றிய வேறுநூல்கள், திருவாரூர்க்கோவை* அருணாசல

* இக்கோவை, காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

புராணம், திருவருணையந்தாதி என்பன. அன்றியும், வீரைக் கவிராசபண்டிதர் இயற்றிய சௌந்தரியலகரிக்குச் சிறந்ததோர் உரையும் இவர் எழுதியுள்ளனர். இவர் வடமொழியிலும் சிறந்த புலமையுடையவராயிருந்தனர் என்பது அவ்வுரையால் புலனாகின்றது. இவர் திருவண்ணாமலைக்கு மேற்கேயுள்ள தாழையூரினர் என்பதும் கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதும் ஈண்டு அறியத்தக்கன.

2. இறைசைப்புராணம்:— இறைசை என்பது இக்காலில் எலவானாசூர் என்னும் பெயருடன் தென்னார்க்காடுஜில்லா திருக்கோவலூர்த்தாலூகாவில் உளது. அது முற்காலத்தில் இறையானரையூர் என்னும் பெயருடையதாயிருந்தது என்பது அவ்வூர்க் கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது. அவ்வூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் இயற்றியருளிய திருவிளையாடல்களைக்கூறும் தலபுராணமே இறைசைப்புராணமாகும். இந்நூலின் ஆசிரியர் திருமலைநயினார் சந்திரசேகரர் என்னும் புலவர் ஆவர். எனவே இவர் சந்திரசேகரர் என்ற இயற்பெயருடையவர் என்பதும் திருமலைநயினாருடைய புதல்வர் என்பதும் அறியக்கிடத்தல் காண்க. இவ்வாசிரியர் மெய்கண்டசந்தானத்தைச் சேர்ந்த திருவண்ணாமலைச் சத்தியஞானதரிசினிகளின் மாணவர். இவர் இறைசைப்புராணம் பாடி அரங்கேற்றியபோது, கோயில் அதிகாரிகள் இவருக்குச் சில நிலங்களும் ஆனந்ததாண்டவன் திருவீதியில் ஒரு மனையும் கி. பி. 1510ஆம் ஆண்டில் அளித்துள்ளனர். இச்செய்திகளெல்லாம் எலவானாசூர்க்கோயில் முதற்பிராகாரம் மேலைச்சுவரில் வரையப்பட்டுள்ள ஒரு கல்வெட்டினால் நன்குபுலனாகின்றன (Ins. 485 of 1938). இந்நூலாசிரியர் பதினாறும்நூற்றாண்டில் வாழ்ந்த புலவராவர்.

3. ஒங்குகோயிற்புராணம்:— இராமநாதபுரம்ஜில்லாவிலுள்ள திருப்புத்தூரில் திருத்தளியாண்டநாயனார்கோயிலில் எழுந்தருளியுள்ள ஒங்குகோயிலுறைவார் என்னுஞ் சிவபெருமான்புரிந்தருளிய திருவிளையாடல்களைக் கூறுவது இப்புராணமாகும். இது, திருவம்பலமுடையார் மறைஞானசம்பந்தர் என்னும் பெரியாரால் இயற்றப்பெற்றது. இவ்வாசிரியர் திருப்புத்தூரிலிருந்த சிறுமடம் என்னும் பெயருடைய ஒருமடத்தில் வதிந்தவர்; மெய்கண்டசந்தானத்தைச்சேர்ந்தவர்; கி. பி. 1484ஆம் ஆண்டில் புராணம்பாடி அரங்

கேற்றியவர். இவர் தம் நூலை அரங்கேற்றியபோது கோயிலதிகாரிகள், மேல் திருமங்கலம் என்ற மண்ணிமங்கலத்தில் இவருக்கு ஐந்துமாநிலம் அளித்தனர் என்று தெரிகிறது. இச்செய்திகள், திருப்புத்தூர்க் கோயிற் கீழைப்பிராகாரத்திற் காணப்படும் ஒரு கல்வெட்டிற் பொறிக்கப்பெற்றுள்ளன (Ins. 180 of 1936). இவ்வாசிரியர் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவராவர்.

மேலே குறிப்பிட்ட திருப்பாலைப்பந்தல் உலா, இறைசைப் புராணம், ஓங்குகோயிற்புராணம் என்னும் நூல்கள் இக்காலத்தில் உள்ளனவா என்பது புலப்படவில்லை.

---

## மதிப்புரை

[திருக்குறள் காமத்துப்பால் — காலிங்கர் உரையும் பரிப்பெருமாள் உரையும்:— திருப்பதி ஸ்ரீவேங்கடேசுவரகீழ்த்திசைக்கலைக்கழகத்தின் 9-ஆம் பிரசுரம். பதிப்பாசிரியர் திரு. வித்வான் T. P. பழநியப்பபிள்ளை B.O.L. அவர்கள். விலை ரூபா 4. கிடைக்குமிடம்:- ஸ்ரீ வேங்கடேசுவர கீழ்த்திசைக் கலைக்கழகம், திருப்பதி.]

திருக்குறள் தமிழ்வேதமென்று யாவரும் பாராட்டும் பெருமைவாய்ந்தது. வடமொழிவேதத்துக்கு ஆன்றோர் பலர் பாடியமிட்டதுபோலத் தமிழ்வேதமாகிய திருக்குறளுக்கும் சான்றோர் பலர் உரைகண்டுள்ளனர். அவருள், பரிமேலழகர் கண்டவுரை பலமுறை பதிக்கப்பட்டு நாட்டிற் பெரிதும் பரவியுள்ளது. ஏனையோருரையுள் எட்டளவிலிருந்தவை சில ஒவ்வொன்றாக அச்சிடப்பெற்று வெளிவந்துகொண்டிருக்கின்றன. மணக்குடவருரை சில ஆண்டுகளுக்குமுன் வெளிவந்தது. இதுபொழுது திருக்குறளிற் காமத்துப்பாலுக்குமட்டும் காலிங்கராயரும் பரிப்பெருமாளும் கண்ட உரைகள், திருப்பதி ஸ்ரீ வேங்கடேசுவர கீழ்த்திசைக்கலைக்கழகத்துத்தமிழ்விரிவுரையாளர் வித்வான். திரு. T. P. பழநியப்பபிள்ளை (B O.L.) அவர்களால் நன்கு ஆராய்ந்து வனப்புற அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. இப்பதிப்பு, திருக்குறளுரைகளின் காலவாராய்ச்சிக்கட்டுரையுடன்கூடியது; பிறவுரைகளோடு ஒப்புநோக்கி உரைநயங்காணப்புகுவார்க்கு மிகப் பயன்படத்தக்கது. புதியநூல்களை ஆக்கி வெளியிடுதல்போலப் பழைய நூல்கள் இறந்தொழியாது காத்தலும் சிறந்த பணியாகும். பழைய இரண்டு உரைநூல்கள் மறைந்தொழியாதபடி தக்காரைக்கொண்டு ஆராய்ந்து வெளியிடுவித்த திருப்பதி ஸ்ரீ வேங்கடேசுவர கீழ்த்திசைக்கலைக்கழகம் மேலும் பல நற்பணி புரிந்து நீடுவாழ்க.

---

# திருக்குற்றாலத்தலபுராண இன்கவிவிளக்கம்

திருவாளர் ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.

[42-ஆம் தொகுதியின் ௧௬௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

தம்பமீ னுப்புத் துப்புச் சங்குதண் டரளந் தன்பாற்
பைம்பொரு ளனைத்துங் கொண்டார் பான்மைவா னேறி நோக்கி
யிம்பர்மேற் றூவி யைம்பா லிடத்தபல் பொருளுங் கொண்டு
கம்பமார் கடல்போந் தென்னப் போந்தது கடவு ணீத்தம்.

தம்பம் - பற்றுக்கோடு - ஆதாரம் (தமிழகராதி). தம்பமீன் - தன்னை (கடலை) ஆதாரமாகவுடைய மீன்கள். துப்பு - பவளம். தரளம் - முத்து. பான்மை - முறை (தமிழகராதி). வான் - ஆகாயம். இம்பர் - இவ்விடம்; பூமியைக் குறித்தது. ஐம்பால் - ஐந்து இடம்; குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்ற ஐவகைநிலங்களைக் குறித்தது. இடத்த - இடத்துள்ளனவான. கம்பம் ஆர் - (அலைகளின்) அசைவு பொருந்திய. கடவுள் நீத்தம் - தெய்வத்தன்மையுடைய (சித்திரநதியான) வெள்ளம்.

கடலானது, (திருக்குற்றாலம் அடங்கிய ஆரியநாட்டில்) மீன் உப்பு பவளம் சங்கு முத்து முதலான தன்பால் உள்ள பொருள்களையெல்லாம் கொண்டுபோன உலகத்தார் (அவைகளை வைத்திருக்கும்) முறையைத் தெரிந்துகொள்ளும்படி கருதி (மேகமாக) ஆகாயத்திலேறிப்பார்த்து(மழையாக)ப் பூமிமேற்குதித்து(வெள்ளமாகத் திரண்டு பரந்துசென்று) ஐவகைநிலங்களிலும் (மேற்கூறிய கடற்பொருள்களோடு வேறு) பல பொருள்களையும் வாரிக்கொண்டு தான்முன்னிருந்த தன்னிடத்தை (கடலிடத்தை) அடைந்தாற்போல(க் கடலை) அடைந்தது சித்திரநதி யென்பது கருத்து. (11)

கோளிப மிடங்க ராகக் குரைதிரைத் துரகந் தூண்டி
வாளைவா ளாக வீசிக் கமடமாம் பரிசை வாங்கிக்
காளமா நாரை யார்ப்பக் கனவரை விடுத்த சேனை
நீளமார் கடன்மேற் சென்று பொருவது நிகர்க்கு நீத்தம்.

கோள் - வலி - பலம். இபம் - யானை. இடங்கர் - முதலை. குரைதிரை - முழங்குகின்ற அலை. துரகம் - குதிரை. வாளை - வாளைமீன். கமடம் - ஆமை. பரிசை - கேடகம், வாங்கி - கொண்டு. காளமா - எக்காளமாக. ஆர்ப்ப - ஒலிக்க.

முதலைகளை யானைகளாகவும், அலைகளைக் குதிரைகளாகவும் செலுத்தி, வாளைமீன்களை வாள்களாகவீசி, ஆமைகளைக் கேடகங்களாகக்கொண்டு, நாரைகளாகிய எக்காளங்கள் ஒலிக்க(ப் பொதிய) மலை (கடலைத் தாக்கும்படி) விட்டசேனை (வெள்ளம்), கடல் (வெள்ளத்தின்) மேற்சென்று போர்புரிவது போன்றது (பொதியமலையினின்று புறப்பட்டுக் கடலிற்சேர்ந்த சித்திராநதி) வெள்ளம் என்பது கருத்து. (12)

நீடு கோபுர நீண்மதில் கோயில்பூங்
காடு மூருங் கயல்வெடி தாவுவ
நாடு பல்வளம் பார்க்கு நதிமகள்
கோடி கோடி விழிபெறுங் கொள்கையாம்.

பூங்காடு, இங்கே நந்தவனத்தைக் குறித்தது. கயல் வெடிதாவுவ - கெண்டைமீன்கள் குதிப்பன. விழி - கண். கொள்கைஆம் - கொள்கை போலும். நதியைப் பெண்ணாகவும் மீன்களைப் பெண்களின் கண்களாகவும் கூறுதல் கவிமரபு.

(சித்திராநதிவெள்ளத்தினின்று, இருகரைகளிலுமுள்ள) ஊர்களின்மேலும் (அவ்வூர்களிலுள்ள) கோயில்கள் மதில்கள் கோபுரங்கள் நந்தவனங்கள் மேலும் மீன்கள் குதிப்பவைகள், (தான்செல்லும் மார்க்கத்திலுள்ள அளவற்ற வளங்களைக் காணும் சித்திராநதி மாது (அவ்வளங்களைக் காணுதற்குப்) பெற்ற அளவற்ற கண்கள் போலும் என்பது கருத்து. (13)

---

## திருநாட்டுச்சருக்கம்

வரம்புவயற் செந்நெலுக்கு வாழ்வேலி வான்கரும்பு
கரும்பினுக்கு நறுங்கதலி கதலிகட்குக் கமுகவனம்
அருங்கமுகுக் குயர்தாழை யணிவேலி யதன்புறத்துக்
குரம்பையுடை நீர்க்கரும்புங் கொங்குவளை செங்குவளை.

வரம்பு - வரப்பு. வாழ்வேலி - பச்சைவேலி (Livefence). கதலி - வாழை. தாழை - தென்னை. குரம்பு - கரை. உடை - உடைய. நீர்க்கு - நீர்க்கண் - நீரில். கு என்ற நான்காம்வேற்றுமையுருபு, கண் (- இடத்தில்) என்ற ஏழாம்வேற்றுமையுருபுப்பொருள் தந்துநின்றது உருபுமயக்கம். அரும்புதல் - தோன்றுதல் (தமிழகராதி). கொங்கு - வாசனை. செங்குவளை - செவ்வாம்பல் - செவ்வல்லி.

நெற்பயிருக்குக் கரும்பும் கரும்புக்கு வாழையும் வாழைக்குக் கமுகும் கமுகுக்குத் தென்னையும் வேலியாகவுள்ளன. அதற்கப்பாலுள்ள நீர்நிலைகளில் (கண்களுக்கினிய) செவ்வல்லிப்பூக்கள் தோன்றும் என்பது கருத்து. (14)

தாவிவனத் திடைப்பகற்பூந் தாதாடி வருவதனைக்
காவிமலர் கண்காட்டக் கடிக்குமுதம் வாய்விள்ளப்
பூவனசங் கதவடைப்பப் பேட்டளிக்குப் புன்மாலை
வாவியிடைத் துனிதீர்ப்பான் வண்டிசைக்கு மெண்டிசைக்கும்.

வனத்திடை - முல்லைநிலத்தில். பகல் பூந்தாது ஆடி - பகற்காலத்தில் பூக்கும் முல்லைப்பூ முதலிய பூக்களின் (உட்புகுந்து குடைந்து அப்பூக்களின்) மகரந்தப்பொடி(உடம்பிற்)படியப்பெற்று. வருவதனை-வரும் ஆண்வண்டைக் குறித்தது. காவி - (மாதர்கண்ணுக்கு உவமானமான) கருங்குவளை - நீலோற்பலம். கடி - வாசனை. குமுதம் - (மாதர்வாய்க்கு உவமானமான) செவ்வாம்பல். செவ்வல்லி. வாய்விள்ள - வாயைத் திறக்க - சொல்ல (தாற்பரியம்). பூவனசம் கதவு அடைப்ப-(பகலில் விரிந்திருந்த)தாமரைப்பூ(மாலைக்காலம்வந்ததனால்) குவிய. பேட்டு அளி - பெண்வண்டு. புன்மாலை - புற்கென்ற (- ஒளிமழுங்கிய) மாலைக்காலம் (தமிழகராதி). வாவி - தடாகம் - குளம். துனி - புலவிநீட்டம் - நீடித்த ஊடல். இசைக்கும் - ஒலிக்கும்; எண்திசைக்கும் - எட்டுத்திக்கிலும்.

(தடாகத்திலே, தாமரைமலரிலே தன்னோடுகூடியிருந்த பெண்வண்டைப் பிரிந்துசென்று) முல்லைவனத்திலே பகற்காலத்து (மலரும் முல்லை முதலிய) மலர்களின் (உள்ளே புகுந்து குடைந்து அந்த மலர்களின்) மகரந்தப்பொடி (உடம்பெங்கும்) படியப்பெற்று, ஆண்வண்டு மாலைக்காலத்தில் திரும்பிவருவதை (அந்தத் தடாகத்திலுள்ள) நீலோற்பலமலர் (கண்டு, அந்தவண்டின் மனைவியான பெண்வண்டுக்குக் கண்சமிக்கையினால்) காட்ட செவ்வாம்பல்மலர் (வெளிப்படையாக) வாய்விட்டுச் சொல்லத் (தெரிந்துகொண்ட பெண்வண்டு தன்னை நெடுநேரம் பிரிந்திருந்ததற்காக ஊடி வாசற்கதவையடைத்தாற்போலத்) தாமரைமலர் (மனை) இதழ்குவிந்து மூடுதலாகிய கதவடைத்தலைச்செய்ய,(வந்த) ஆண்வண்டு (தன் மனைவியாகிய) பெண்வண்டுக்கு ஊடல் தீரும்படி (அப்பெண்வண்டு உள்ளேயிருந்த தாமரைமலரைச் சுற்றி) எட்டுத்திக்கினும் (ரீங்காரமாகிய) இசைப்பாட்டுப்பாடுமென்பது கருத்து. (15)

பிறங்காவித் திருமலரும் பிரிந்தார்வாய்த் திருமலரும்
இறங்காது பாசடையிட் டிருந்தாலும் பாலனங்கள்
அறங்காவல் பூண்டிருப்பா ரகந்தோறு மகந்தோறும்
உறங்காது மும்முரச மொருகாம னெழுமுரசின்

"பிறங்கு - விளங்குகின்ற. ஆவி - தடாகத்திலுள்ள. திரு மலர் - இலக்குமி வாழும் தாமரைப்பூவானது. பாசு அடையிட்டு இருந்து ஆலும் - (தன்னிடத்தில்) இளைய முட்டையிட்டிருந்து ஒலிக்கும். பால் அன்னங்கள் - வெள்ளிய அன்னப்பறவைகள். இறங்காது — (கீழே) இறங்கப் படாது. பிரிந்தார் - கணவரைப்பிரிந்த பெண்களின். வாய்த் திருமலர் - வாயாகிய அழகிய மலரானது. (பாசு அடையிட்டிருந்தாலும்) - பசிய இலையிற் படைத்திருந்தாலும். பால் அனங்கள் - பாலும் சோறும். (இறங்காது) — தன்னுள்ளே புகப்படாது. உம்மைகள் — எண்ணுப்பொருளன. பாசென்பது - பச்சைப்பிள்ளையென்றதுபோ லிளமைகுறித்தது. அறங் காவல்பூண்டிருப்பார் — அரசர். அகம் — அரண்மனை. மகம் — யாகம். உறங்காது — ஒலியாதிராது (தாற்பரியம்). மும்முரசம் — படைமுரசு, கொடைமுரசு, கலியாணமுரசு, என்பன. எழுமுரசின் - சத்தசமுத்திர மாகிய முரசைப்போல்" திருக்குற்றாலத்தலபுராணம் அரும்பதவுரை. பாலனங்கள் என்பதில் கள் அசைநிலை (தமிழகராதி). கடலை மன்மதனுடைய முரசு என்பது கவிமரபு. கடல் ஏழாதலின், எழுமுரசெனப்பட்டது.

தாமரைமலரில் முட்டையிட்டு (அடைகாத்து) இருக்கும் வெள்ளையன்னம் (தன் இருக்கையைவிட்டு) இறங்காது. கணவரைப் பிரிந்தமாதர் (முன்னே) பச்சை (வாழை) யிலையிலே பாற்சோறு படைக்கப்பட்டிருந்தாலும் (அம்மாதர் பிரிவுத்துன்பத்தால் உண்ண முடியாமையினால்) அது (பாற்சோறு), அவர்களுடைய மலர் (போன்ற) வாய்க்குள் இறங்காது. அரசர் அரண்மனையிலும் யாக (சாலையிட)த்திலும் மூன்றுவகை முரசங்களும் கடல்போல (ஓயா மல்) ஒலித்துக்கொண்டிருக்குமென்பது கருத்து. (16)

[தொடரும்.]

# செய்யுட்கடிதங்கள் *

தமிழ்நாட்டிற் பண்டைக்காலந்தொட்டுக் கவிபாடும் ஆற்றல் வாய்ந்த புலவர்பெருமக்கள் உலகியற்செய்திகளைப்பற்றியும் தத்தம் குடும்பச்செய்திகளைக்குறித்தும் அரசர்கள், செல்வர்கள், மற்றைப் புலவர்கள் என்னும் இவர்களுக்கு உரைநடையில் அன்றி விளக்கமாகச் செய்யுள்வடிவிலும் ஓலை, அல்லது கடிதம் எழுதுதலை வழக்கமாக மேற்கொண்டிருந்தனர். இதனை ஓலைத்தூக்கு என்று நன்னூலார் குறிப்பிட்டுள்ளார். தூக்கு என்பதற்குப் பொருள் செய்யுளாகும். ஆகவே ஓலைத்தூக்கு என்பது ஓலைப்பாட்டு அல்லது கடிதச்செய்யுள் என்றாகும். இச்செய்யுட்கடிதத்தை அனுப்புவோர் அனுப்பப்படுவோரினும் பெரியவராக இருப்பின் அப்பொழுது அது திருமுகப்பாசுரம் என்றும் பெயர்பெறும். இப்பொழுது வழங்கும் காயிதநிலையிற் பழங்காலத்திற் பனையோலை இருந்தமையால் ஓலைத்தூக்கு என்று வழங்கப்பட்டது. செய்யுள் வடிவிற் கடிதம் எழுதுதலைக் கடவுளும் மேற்கொண்டிருந்தனர் என்பது தமிழ்மரபு. பற்பல சந்தர்ப்பங்களில் தம் அன்பர்பொருட்டுச் சிவபெருமான் செய்யுள்வடிவிற் கடிதம் எழுதியதாகக் கதைகளிற் கேட்கின்றோம். தமிழ்ப்பெருங்காப்பியங்களிலும் இச்செய்யுட்கடிதங்கள் பல காணப்படுகின்றன. பிற்காலத்தே தமிழ்நாட்டுச் சிற்றரசர்களின் அவைக்களங்களில் இருந்த புலவர்கள் தம் பெருமைகளைப் பலவாறு விரித்தும் தமக்கு வேண்டியவைகள் இன்னவென்று குறிப்பிட்டும் செய்யுட்கடிதம் எழுதியுள்ளார் என்பதற்குச் சான்றாகப் பல கவிதைகளைக் காணலாம். வகைக்கு ஒவ்வொன்று காட்டலாம் என்று எண்ணுகிறேன்.

---

* இது திருவாளர் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் 14–11–45-ல் திருச்சி வானொலிநிலையத்திற் பேசியது; அந்நிலையத்தார் அநுமதிபெற்று வெளியிடப்பட்டது.

மதுரையிலே சிவபத்தியிற் சிறந்துவிளங்கிய பாணபத்திரர் என்பார் வேறொன்றையுங்கருதாமற் சிவபெருமானையே மனமுருக யாழிசையோடு பாடிக்கொண்டிருக்கும் நாளில் அவர்க்கு நேர்ந்த வறுமைத்துன்பத்தைப்போக்கக்கருதிய இறைவன் சேர அரசற்கு ஒரு செய்யுட்கடிதம் எழுதி, அப் பாணபத்திரரிடம் கொடுத்து இதனைச் சேர்ப்பித்துப் பொருள்பெற்று வறுமைகளைக என்று அருளிச்செய்தனராக, அக்கட்டளைப்படியே பாணபத்திரர் நடந்து கொண்டார் என்பது வரலாறு. அப்படிக்கொடுக்கப்பட்ட பாடல் திருமுகப்பாசுரம் என்னும் பெயரால் சைவத்திருமுறைகளுள் ஒன்றாகிய பதினோராந்திருமுறையில் திருவாலவாயுடையார் அருளிச்செய்ததாக முதற்கண் உள்ளது. அப்பாசுரம் வருமாறு:—

“மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே”

என்பதாம். இப் பாசுரத்தில் எழுதினவர்பெயர் ஏற்றுக்கொள்வோர்பெயர் கொண்டுசெல்வோர்பெயர் அவர் விரும்பும் பயன் ஆகிய இச் செய்திகள் விளக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளன. இங்ஙனமே தில்லைத் திருச்சிற்றம்பலமுடைய இறைவன் பெத்தான்சாம்பான் என்பவருக்கு முத்திநிலைக்குரிய தகுதியைக் கொடுக்கும்படி சைவசமய ஆசாரியருள் ஒருவராகிய கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியருக்கு அனுப்பியதாகத் திருமுகப்பாசுரம் மற்றொன்றும் உளது. அது வருமாறு:—

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெத்தான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை"

என்பதாம். இதன்கண் இறைவன் தம்மை அடியார்க்கெளியன் சிற்றம்பலவன் என ஒருமையாகவும் தம் அடியாருள் ஒருவராகிய உமாபதிசிவாசாரியரைக் கொற்றங்குடியார் எனப் பன்மையாகச் சிறப்பித்தும் கூறியிருத்தல் நினைக்கத்தக்கது. இதனால் கடிதம் எழுதுவோர் தம்மினும் எழுதப்படுவோரை உயர்த்துக்கூறுதல் மரபென்பது புலனாதலறிக. இதுவே இன்றும் பெரியார் மேற்கொள்ளும் நெறியாகும். இதற்கு மாறாகப் பிற்காலப் புலவர்களுடைய சீட்டுக்கவிகளில் எழுதப்படுவோரினும் எழுதும் புலவர் தம் பெருமையை மிக்க ஆரவாரத்தோடு சிறப்பித்துக்கூறியிருக்கின்றனர். இது பொருந்துமா வென்பதைப் பின்னர்க் கூறுவேன். அதற்கு இடையில் தமிழ்ப் பெருங்காப்பியங்களாகிய சிலப்பதிகாரம் சிந்தாமணி முதலியவற்றிலே கடிதமுறையாக எழுதப்பட்ட செய்யுட்களைப்பற்றிச் சில தெரிவிக்கலாம் என்று எண்ணினேன். ஆனால் அக்காப்பியங்களிற் கடிதமுறையாக எழுதப்பட்டனவெல்லாம் செய்யுள்நடையாக இன்றி, வேறுவகையாக எழுத இயலாதாதலின் செய்யுட்கடிதம் என்பதற்குச் சிறப்புமுறையிற் பொருந்தாதென்று கண்டு அவற்றில் தலைப்பட்டிலேன். ஆயினும் பெருங்காப்பிய ஆசிரியர் இத்துறையிற் செல்லும் நெறிகளை அறிந்து இன்புறுதற்கு எடுத்துக்காட்டாகப் பெருங்கதையில் ஒன்று கூறத் துணிகின்றேன்.

பெருங்கதையென்னும் பெருங்காப்பியத்திற் கடிதமுகமாக எழுந்த செய்யுட்பகுதிகள் பல சந்தர்ப்பங்களில் உள்ளன. அவற்றுள் மானனீகையென்னும் பணிப்பெண்ணை உதயணன் கண்டு காமுற்றநிலையில் அவனுக்கும் அவளுக்கும் இடையே நிகழ்ந்த கடிதப் போக்குவரத்துக்கள் மிகவும் சுவைபயந்துநிற்பன. மானனீகையென்பாள் அழகும், இளமையும் ஒருங்குவாய்ந்தவள். உதயணன் தன் பகைப்ரசனை வென்றபோது அம் மானனீகையைக் கொணர்ந்து

தன் தேவியாகிய வாசவதத்தைக்குக் கோலம்புனையும் வண்ணமக ளாக்கினன். அவள் வனப்பில் ஈடுபட்ட உதயணன் தன் காதற்குறிப் பைத் தன் தேவியறியாதவாறு எவ்வழியாகவேனும் அவளுக்கு அறிவிக்கமுயன்றுகொண்டிருக்கும்போது, மானனீகையாற் கோலஞ் செய்யப்பட்ட வாசவதத்தை அவ்வலங்காரத்திறமையைக் காட்ட உதயணன்பால் வந்தாள். அவளைக்கண்ட உதயணன் மானனீகை யின் அலங்காரம் சிறந்ததாக இல்லையென்றும், சிறந்த முறையிற் கோலஞ்செய்யுந்திறமை தனக்குண்டென்றும், அவள் நெற்றியை யே கடிதமாகக்கொண்டு மானனீகை பயின்ற யவனமொழியில் தன் காதற்குறிப்பை எழுதலானன். எழுதுதற்குரிய மை பூந்துகளோடு கூடிய சந்தனக்கலவையானதால் மஞ்சள்நிறமுள்ள அக்கலவை அவர்தம் மணமங்கலத்திற்கு ஏற்றதாயிற்று. அங்ஙனம் எழுதிய காதற்பாசுரம் வருமாறு:—

“ஒடியா விழுச்சி ருதயண னேலை
கொடியேர் மருங்குற் குயின்மொழிச் செவ்வாய்
மானனீகை காண்க; சேணுயர்
மாட மீமிசை மயிலிறை கொண்டென
ஆடன் மகளிரொ டமர்ந்தொருங் கீண்டி
முந்து பந்தெறிந்தோர் முறைமையிற் பிழையாப்
பந்துவிளை யாட்டினுட் பாவைதன் முகத்துச்
சிந்தரி நெடுங்கணென் னெஞ்சகங் கிழிப்பக்
கொந்தழற் புண்ணொடு நொந்துயிர் வாழ்தல்
ஆற்றேன் அவ்வழ லவிக்குமா மருந்து
கோற்றேன் கிளவிதன் குவிமுகை யாகும்
பந்தடி தானுறப் பறையடி யுற்றவென்
சிந்தையு நிலையுஞ் செப்புதற் கரிது”

என்பதாம். இதன்கண் அவள் பந்தடிக்குந்தோறும் தன் நெஞ்சம் பறையடிக்கப்பட்டது என்று குறிப்பிட்டதும், தான் நினைத்தபடி தன் எண்ணங்களையெல்லாம் குறைவற எழுதுதற்கு நெற்றியாகிய கடிதம் இடந்தராமையால் சுருக்கமாகக் கூறியதுகொண்டு தனக்கு அருளல்வேண்டும் என்று கூறியதும் பாராட்டத்தக்கன. இங்ங னம் எழுதி இவ் அலங்காரத்தை மானனீகைக்குக் காட்டெனா விடுக்க, அவ்வாசகப்பொருள் உணர்ந்த மானனீகை மற்றைநாட்

காலை அப்பெருந்தேவியை மிகவும் சிறந்த முறையில் அலங்கரிப்ப தாகக்கூறி, முன் அவன் எழுதிய யவனமொழியிலே தன் இணக்க மின்மையையெழுதி, 'இக்கோலத்தை உதயணனுக்குக் காட்டுக' என, மீண்டும் வாசவதத்தையின் நெற்றியில் வற்புறுத்தி எழுதி அவள் இணக்கத்தைப்பெற்று மணஞ்செய்துகொண்டான் என்பர். இந்நிகழ்ச்சியில் உதயணன் வண்ணமகளாகிய ஒரு பெண்ணிற்கும் தனக்குமுள்ள காதற்கருத்துக்களை எழுதித்தெரிவித்துக்கொள்ளு தற்குத் தன் பட்டத்து அரசியாகிய வாசவதத்தையின் நெற்றியை யே எழுதுங் கடிதமாக அமைத்துக்கொண்டது மிகவும் பாராட் டத்தக்கது. வாசவதத்தையின் திருமுகத்தையே கடிதமாகக் கொண்டமையால் கடிதச்செய்யுளைத் திருமுகப்பாசுரம் என்று கூறுதற்கு இந்நிகழ்ச்சி மிகவும் பொருத்தமுடையதாயிற்று.

இனிப் பிற்காலத்துப் புலவருள்ளே இராமநாதபுரம் ஸமஸ் தானவித்வானாக விளங்கிய அட்டாவதானம் சரவணப்பெருமாட் கவிராயர், அவர் வழித்தோன்றல்கள், பழனி மாம்பழக்கவிச்சிங்க நாவலர், சென்னிகுளம் அண்ணாமலைரெட்டியார் முதலியோர் அரசர்களுக்கும் செல்வர்களுக்கும் பற்பல சந்தர்ப்பங்களிலே செய் யுட்கடிதங்கள் பல எழுதியிருக்கின்றனர். அவற்றைச் சீட்டுக்கவி யென்று வழங்குவர். இங்கே குறிப்பிட்ட புலவருள்ளே அட்டாவ தானம் சரவணப்பெருமாட்கவிராயர் இத்துறையில் தலைசிறந்தவ ரென்னலாம். இவர் செய்யுட்களில் ஒன்று பின் வருவது:—

'ஜெயராம நாதனே தெய்வந் தனுக்கோடி
தீர்த்தமே தீர்த்தமெங்கள் சேதுபதியே ராஜன்'

என்னும் தொடக்கமுடைய பாட்டில்,

"நயமதுர மறியாத முழுமடையர் செவியெனும்
நல்லபாம்புப் புற்றிலே
நளினத் திருந்தமிழ்ச் செந்தேன் குழம்பையொரு
நாளுங் கவிழ்த்திடாதோன்
நாவலந் தீவினுள நாடெலாம் புகழ்பெறு
நராதிபர் வணங்குதுல்யன்
நாவலர் குழாம் பல துதிக்கும் அட்டாவதா
னப்ரபல சார்வபூமன்

இயலாயிரங் கோடி பிரபந்த முழுதுமொ
ரிமைப்பொழுதினிற் பாடுவோன்
இலக்கண சமுத்திரஞ் சோமசுந்தர குருவெ
னையனடிமைக்கு மடிமை
ஏகசக்ராதிபதி சரவணப் பெருமாட்க
வீச்சுரன் செங்கையோலை
இந்த்ரதரு யாழ்ப்பாண மேவிய வயித்யலிங்
கேந்த்ரனெதிர் கொண்டுகாண்க

வயமான கையிலே மூக்குள்ள தொன்றுதிரு
மாயன் பிறப்பிலொன்று
வாற்புறமொர் கொம்புந் தலைப்புறமொர் கொம்புமுள
வாகனந் தன்னிலொன்று
வலியார் புரங்களைச் சுடுகின்ற பொருளொன்று
வாரமது தன்னிலொன்று
வரவுடன் வெளுத்த சந்திரனென்று நீயின்ன
வரிசைதந் தருள்புரிவையே."

இக் கடிதச்செய்யுளில் தம்மை ஆதரித்த சேதுவேந்தரிடத்துத் தமக்குள்ள அன்பை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் கவிச்சுவையறியாதவர்முன்னிலையில் இனிய தமிழ்வளங்கொழிக்குஞ் செய்யுட்களைப் பாடிக்காட்டுவதில் அவர்க்குள்ள வெறுப்பை,

'நயமதுர மறியாத முழுமுடையர் செவியெனும்
நல்லபாம்புப் புற்றிலே
நளினத் திருந்தமிழ்ச் செந்தேன் குழம்பையொரு
நாளுங் கவிழ்த்திடாதோன்'

என்று தம்மைக் கூறிக்கொண்டதனால் அறியலாம். இது மிகவும் பாராட்டத்தக்கது. செவியென்னும் நல்லபாம்புப்புற்று என்றதனால் கவிச்சுவையறியாதார்செவிகளில் ஏறத்தக்கன பாம்பின் நஞ்சைப்போன்ற கொடுஞ்சொற்களேயென்பது விளங்கும். மேலும் இத்துணை வீறுபடைத்த புலவர் தமக்குக் கல்வியறிவுறுத்த சோமசுந்தரகுருவின்பால் மிகுதியான பணிவும் அன்பும் வைத்திருப்பது பாராட்டத்தக்கது. இதற்குச்சான்று, 'இலக்கண சமுத்திரம் சோமசுந்தரகுருவென் ஐயனடிமைக்கும் அடிமை' என்னும் பகுதியாகும். இத்தகைய சீட்டுக்கவிமூலம் யாழ்ப்பாணத்து

வைத்தியலிங்கம் என்னும் செல்வரிடத்து இவர் தமக்கு வேண்டிய பொருளைக் குறிப்பிட்டிருப்பது வியக்கத்தக்கது. அப்பொருள்களாவன:—வயமான கையிலே மூக்குள்ளதொன்று என்றதனால் துதிக்கையிலே மூக்குடைய யானையென்பதும், மாயன் பிறப்பிலொன்று என்றதனால் குதிரையென்பதும், வாற்புறமோர் கொம்பும் தலைப்புறமோர் கொம்புமுள வாகனம் என்றதனால் இருபுறமும் தாங்குகொம்புகளையுடைய பல்லக்கு என்பதும், வலியார் புரங்களைச் சுடுகின்ற பொருளொன்று என்றதனால் பரமசிவன் திரிபுரத்தைச் சிரிப்பினால் எரித்தார் என்னும் புராணக்கதையுண்மையாலும் சிரிப்பிற்கு நகையென்னும் பெயருண்மையாலும் ஆபரணம் என்பதும், வாரமது தன்னிலொன்று என்பதனால் வெள்ளி வெண்பொற்காசு என்பதும், வெளுத்த சந்திரன் என்றதனால் சந்திரன் கலையாதலின் வெண்மை நிறமுடைய ஆடையென்பதும் ஆகும். யானை குதிரை, பல்லக்கு முதலியன அரசர்க்குரியனவாதலால் அவ்வியைபு பற்றியே இக்கவிராயர் தம்மை ஏகசக்கிராதிபதி சரவணப்பெருமாட்கவீச்சுரன் என்று கூறிக்கொண்டார்போலும். இங்ஙனம் இவரும் மற்றைய புலவரும் தம் பெருமைகளை மிகுதியாக வெளிப்படுத்திக்கொள்ளுதற்குப் பவணந்தி என்னும் மற்றொருபுலவர் தற்புகழ்ச்சிசெய்துகொள்ளலாகாது என்பதற்கு மறுதலைவிதியாக ஒரு விதி கூறியுள்ளார். அது, “மன்னுடைமன்றத்து ஓலைத்தூக்கினும்,........தன்னைப்புகழ்தலும் தகும் புலவோர்க்கே” என்பதாம்.

இங்கே கூறப்பட்ட புலவர்களின்காலத்துக்கு மிகவும் பிற்பட்டவராகிய சென்னிகுளம் அண்ணாமலைரெட்டியார் கடிதப்பாடல்கள் மேற்குறிப்பிட்ட ஆடம்பரங்களில்லாமல் தெளிவான இனிய நடையில் அமைந்தனவாகும். அவரை ஆதரித்த ஊற்றுமலை ஜமீன்தாருக்கு அவரெழுதிய கடிதச்செய்யுட்களில் ஒன்று பின்வருவது:—

“ஆதியிலக் கணப்படியே யுதித்திரண்டிற் கடங்காத்துன் பாக்கி மூன்றை
மேதினியிற் பலவிதமாச் செவைசெயு மாறுபுரி வித்த காலிற்
பாதியினால் யான்பட்ட பாடுசொல முடியாது பஞ்ச மென்ப
தேதுமில்லை யோதுமில்லை மிகத்தெரு வுலவுதற்கும் ஏது வில்லை”

இச் செய்யுட்குமுன்னுள்ள பாடலால் அப்புலவர் ஊற்றுமலையில் ஜமீன்தாரவர்களைக்கண்டு தம் இனியகவிகளைப் பாடிக்காட்டிவிட்டுத் தம் சொந்த ஊர்க்குச் சென்றதைக் குறிப்பிட்டுள்ளார். இப்பாடலில் தாம் சொந்த ஊரில் இருக்குங்கால் தம் உடலுக்கு நேர்ந்த நோய்த்துன்பத்தைப்பற்றியும் அதன்பொருட்டு நேர்ந்த பொருட்செலவு முதலியவற்றைக்குறித்தும் குறிப்பிற் புலப்படவைத்து எழுதிய செய்திகள் விசித்திரமாக அமைந்து படிப்பவர்க்கு இன்பஞ் செய்வனவாம். இதன்கண் ஐந்திலக்கணங்களையும் முறையே குறிப்பிட்டு அக்குறிப்பினல் தமக்கு நேர்ந்த துன்பத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

ஆதியிலக்கணப்படியே உதித்து என்றதனுல் முதல் இலக்கணம் எழுத்தாதலின் தலையெழுத்துப்படி தமக்கு நோய்தோன்றியது என்பதும், இரண்டிற்கு அடங்காத்துன்பாக்கி என்றதனுல் இரண்டாம் இலக்கணம் சொல்லாதலின் அந்நோய் சொல்லிற்கடங்காத்துன்பத்தை உண்டாக்கிற்று என்பதும், மூன்றைமேதினியிற் பலவிதமாச் செலவுசெய்யுமாறு புரிவித்து என்றதனுல் மூன்றுமிலக்கணம் பொருளாதலின் கையிலுள்ள பொருளைப் பலவிதமாகச் செலவிடச்செய்ததென்பதும், அத்தகைய நோய்தான் யாதெனின் நாவிற்பாதி என்பதனுல் நான்காம் இலக்கணம் யாப்பாதலாலும் பாதியென்பது அரையாதலாலும் அதனுல் அறியலாம் என்பதும், பஞ்சம் ஏதுமில்லை என்பதால் ஐந்தாமிலக்கணம் அணியாதலின் உடலின் அழகு குன்றிவிட்டதென்பதும் பெறப்படவைத்தது பாராட்டத்தக்கது. இங்ஙனம் செய்யுட்கடிதங்களின் இயல்பு ஒருவாறு கூறப்பட்டது.

# பல்லவர்மீது சாசனப்பாடல்கள்

ராவ்ஸாஹிப் ஸ்ரீ. எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.

கீழ்வரும் பாடல்கள் தென்னிந்திய சிலாசாசனங்கள் XII-ஆம் தொகுதியிற் காணப்படுகின்றன.

1 சுந்தரத் தோரண நாட்டித் துகிற்கொடி சூட்டிமுத்துப்
பந்தரப் பாலிகை தீபம் பரப்புமின் பல்லவர்கோன்
செந்தளிர்க் கைகோத் தபையன் மகளுடன் தில்லையுலா
வந்தளிக் கும்பெரு மாள்வெற்பர் மாதை மணஞ்செய்யவே.

இச் செய்யுள் அத்தொகுதியின் முன்னுரையில் 10-ஆம் பக்கத்து அடிக்குறிப்பில் உள்ளது. இதன்கண் அபயன் மகளைப் பல்லவர்கோன் திருமணஞ்செய்ததும், அவ்விருவரும் தில்லையில் உலாவந்ததும், அப்பல்லவர்கோன் மலைநாட்டரசனொருவன் மகளையும் மணஞ்செய்ததும் குறிக்கப்படுகின்றன.

2 ..................பெற்று விளங்க
...............[தொ]டுகடற் படப்பை
ஒற்றி மூதா ருகந்
நெற்றி நாட்டத்து நிர்மலன்கோயிற்
குடதிசை......ந்த வடதிசை எடுத்து
மளப்பெருஞ் சிறப்பிற் றன்பெயர் நிறீஇய
சோளமால் யீஸ்வரகரத்து மன்னி
யருணி......சிவப்பெருமா னடிகட் கணிமிக
அர்ச்சிப் பவர்க்கு நிச்ச மூக்காலுநெய்
விரவிக் காட்டுந் திருவமிர் திற்குங்
கந்தத் திற்குந் தூபத் திற்கு

நந்தா நல்விளக் கொன் றெரிவதற்கு
.........க்கும் மல்கும் வழுக்கா
தென் று மிடுவோர்த...... வோலக்கம்
அசைவில் கீர்த்தி அபராஜித விக்ரம பருமற்க்
கியாண்டு பன்னிரண்டாண்டினுல்
...............வைத் திகணே மூதா
ரிகணேய்க் கிழவோ ரென்னும் குடியிடை
நிறைபுன லமர்கு.........துங்கனுறும்
நினைத்த செல்வரும் பனிச்சைப் புலமும் என்
திருபே ரேத்தமு மிவற்றுக் கேரியும்
பொருள்கைக் குடுத்துப் புளி(லி?)யதிய
அற்ற மின்றி விற்றுக் கொண்டு
கன்மிசை எழுதி வைத்தனன்
மன்.........ருவழி மாநிலத் தினிதே. ௧

2 இது 93-ஆம் எண்ணுள்ள சாசனம். அபராஜித விக்கிரம வர்மனது 12-வது ஆண்டில் இது எழுதப்பட்டது. ஒற்றிமூதூரிலுள்ள சோழமால்யீஸ்வரருக்குத் திருநுந்தாவிளக்கு முதலியன வைப்பதற்கு நிலம்விட்டமையைக் கூறுகின்றது.

3 திருந்து திருத்தணியில் செஞ்சடையீ சற்குக்
கருங்கல்லாற் கற்றளியா நிற்க-விரும்பிய
நற்கலைக ளெல்லாம் நவின்றசீர் நம்பியப்பி
பொற்பமையச் செய்தான் புரிந்து.

இ[வ்]வெண்டா பெருமானடிகள் தாம் பாடி அருளுத்து.

3 இச்செய்யுள் 94-ஆம் எண்ணுள்ள சாசனம். திருத்தணிகையில் நம்பிஅப்பி என்பவர் கற்றளியெடுப்பித்த செய்தி கூறப்படுகிறது. இவர் அபராஜிதன்காலத்துள்ள வேறொரு சிலாசாசனத்திலும் தர்மஸ்தாபனம் செய்தவராகக் கூறப்படுகிறார். ஆகவே

திருத்தணிகையில் வீரட்டானேசுவரர்கோயில் எப்போது இயற்றப் பட்டதென்ற செய்திக்கு உறுதியான சான்றாக இச்செய்யுள் உள் ளது.

4 தங்கோ நகர்பெறத் தம்புவி தாம்பெறத் தாள்வணங்கிச்
செங்கோல் வளைக்கை யரிவைய ரோடும் அடியுங்கையும்
பங்கே ருகமன்ன பல்லவன் காடவன் பார்முழுதாள்
எங்கோ னனுமதந் தோளி விட[ர] மன்ன ரெம்மன்னரே.

5 பொருதிக் கிலுஞ்சென்று போர்வென்ற பல்லவன் காடவர்கோன்
கருதிப் பொரச்சென்று சேவூரி னிற்றிருக் கண்சிவக்கப்
பருதிக்கு மேலு முயர்பிணக் குன்றிற் பரந்திழிந்த
குருதிப் புனல்தொண்டை நன்னா டடங்கலும் கொண்டதுவே.

6 கூராழி யேந்திய பல்லவற் குக்கூடல் மன்னவற்குப்
பாராழி சூழந் திசைபரிக் குப்பந்தி பண்டடைத்த
நீராழி வேழங்க ணீராடு மாமடு நின்றகொற்றப்
போராழி வெற்பிவன் செங்கோல் நடக்கும் பெருவழியே.

7 தொழுதிய லாமன்னர் தொண்டைத் திருநாடு கொண்டவரூர்
கழுதிய லக்கண்ட காடவன் பல்லவன் காசினிமேற்
பழுதிய லாத்தனிச் செங்கோல் நடாத்திப் பராக்ரமஞ்சென்
றெழுதிய தூணங்க ளெண்டிசை சூழ்ந்த வெழுகிரியே.

8 கைம்மலை வெள்ளக் கடற்படைப் பல்லவன் காடவர்தஞ்
செம்மலை வந்து பணியா வடமன்னர் சேனைவிட்டுத்
தம்மலை விட்டுப் புறமலை வேலித் தலத்துளஞ்சா
தெம்மலை யெச்சுரத் துப்புகு வார்புக் கிருப்பதற்கே.

9 வண்டற் புனற்பெண்ணை நாடுடை யான்வட வேங்கடவன்
தொண்டைத் திருநாடு தோள்வலி யாற்கொண்ட தொண்டைமன்
கண்டற் கடற்கச்சிப் பல்லவன் காடவன் காரிருளிற் [னன்
பண்டப் பிரம வரக்கன் மலர்ப்பொன் பதாம்புயனே.

4—9 இச்செய்யுட்கள் 125-ஆம் எண்ணுள்ள சாசனம். இச் சாசனம், "கூடல்ஆளப்பிறந்தானுன காடவராயர்மகனர் தொண்டை மண்டலங்கொண்ட பல்லவாண்டாரான காடவராயர் கல்வெட்டு" எனத்தொடங்குகின்றது. இவ்வரசன், 'பல்லவன்' 'காடவர்கோன்' 'கூடல்மன்னவன்' என்று பலபட அழைக்கப்படுகின்றான்; சேவூரில் ஒரு போர்புரிந்ததாகவும் 5-ஆம் செய்யுள் குறிக்கின்றது. இப் போரிற் கிடைத்த வெற்றியால் தொண்டைநன்னாடு இவனுக்கு உரியதாயிற்று என்று நினைக்க இடமுண்டு. பெண்ணைநாடு, வட வேங்கடம், கடல்சூழ்ந்தகச்சி என்பன இத்தொண்டைநாட்டில் அடங்கியவை. சேவூர் என்றது தென்னாற்காடுஜில்லா, திண்டி வனம் தாலுக்காவில் உள்ள மேலைச்சேவூர் என்று கொள்ளலாம். வட நாட்டு அரசர்களையும் இவன் வென்றவனென்பது 6-வது செய்யு ளால் விளங்குகிறது. இதிற் குறித்துள்ள அரசன் முதலாங் கோப் பெருஞ்சிங்கனாக இருத்தல் கூடும். இவன் 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசாண்டவன்.

4-ஆம் செய்யுள் 130-ஆம் எண்ணுள்ள சாசனத்திலும், 6-ஆம் செய்யுள் 127-ஆம் எண்ணுள்ள சாசனத்திலும் உள்ளன.

4-ஆம் செய்யுளைக்கொண்ட 130-ஆம் எண்ணுள்ள சாசனத் தில் "கூடல் எழிசைமோகன் ஆளப்பிறந்தானு(............ர் மகனர் தொண்டைமண்டலங் கெ)ாண்ட பல்லவாண்டாரான காடவராயர்" எனத்தொடங்குகிறது. இச்செய்யுட்குப்பின் "(போரிடை) மன்னர் புகல்கொண்டவர்க்கிவர் பொன்மகுடத்—தா" என்ற செய்யுளடி யொன்று காணப்படுகிறது. சாசனம் முழுவதும் சிதைந்துள்ளது.

6-ஆம்செய்யுள் 127-ஆம்எண்ணுள்ள சாசனம். "கூடல் ஆளப் பிறந்தானுன தொண்டைமண்டலங்கொண்ட பல்லவாண்டாரான வீரர்வீரன் காடவராயர்" எனத்தொடங்குகின்றது.

10 அறம் வளரக் கலி மெலியப்
புகழ் பெருகப் பகை பணியத்
திசை யனைத்தும் செவிடு படாமற்
செங்கோலே முன்னாகவும்
சீயாச்சினையே தெய்வமாகவும்
இனிது நடாத்தி நிகழா நின்ற
பதினெண் பூமி திசை விளங்கு
திறலா யிரத்துத் திகழ்வா ணிகரோம்
பெண்ணை வடகரைச் சேதிமண் டலத்து
ஆவூர் உடையார் திருவகத்தீஸ்வரமுடையநாயனாற்கு.

10 இது இத்தொகுதியில் 236-ஆம் சாசனம். "சகல புவன சக்கரவர்த்திகள் ஸ்ரீகோப்பெருஞ்சிங்கதேவருக்கு யாண்டு 30வது. நாயனார் சூராண்டாரான செயசேவகஞ் சேதிராயர்நாளில்" எனத் தொடங்குகிறது. சீயாச்சினை = ஸ்ரீ ஆஜ்ஞா.

இச்சாசனத்தில் மகாபோதியென்றும், சாக்கியரென்றும் வருகின்றன. ஆதலால் இதில் குறிக்கப்பட்டுள்ள வணிகர்கள் பௌத்தமதத்தைச்சார்ந்தவர்களென்று தோன்றுகிறது. இதன் காலம் கி. பி. 1272 ஸெப்டம்பர் 29உ வியாழக்கிழமை.

11 [கோல]மதிட் கச்சித் திருப்பருத்திக் குன்றதனிற்
சீலமலி மும்முனிவர் சேர்ந்திருந்த—மேல்பாற்
............கயைத் திண்சிலையாற் செய்தான்
தருந்தமிழப் பல்லவர்கோன் தான்.

11 இச்செய்யுள் 259-ஆம் எண்ணுள்ள சாசனத்தின் அடிக் குறிப்பிற் சிதைவு. தமிழப்பல்லவர்கோன் என்றது அழகிய பல்லவனென்ற அரசனாதல்வேண்டும். இவன் காலம் 13-ஆம் நூற்றாண்டென்று கூறப்படுகிறது. இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனுக்கு அழகியபல்லவன் என்ற சிறப்புப்பெயர் உண்டு.

12 கூடாத வன்புகட் கூட[ல்]மன் ஆட்கொளி காடவர்கோன்
சேடார் பொழிற்றினை மாநக ரீசரைச் சிந்தைசெய்து
பீடார் நிலத்துப் பெரும்பாடி காவல்வெட் டிதவி[ர்]த்து
நாடா ரமுதுக்கு நந்தா விளக்குமே நாட்டினனே.

12 இது 262-ஆம் எண்ணுள்ள சாசனம். கூடல்மன் ஆட்கொள்ளி காடவர்கோன் என்பவன் கோப்பெருஞ்சிங்கனது முன்னோர்களில் ஒருவன் என்றும், இரண்டாம் இராஜராஜசோழனது காலத்தவனென்றும் தெரிகின்றன.

13 வரிவளை பொலம்பூண் கொடுத்த மங்கையர்
மயலுற மனந்தான் அடக்கு கின்றன
மதிகதி ரிரண்டாங் கெனச் சிறந்தொளிர்
வயிரமு மிசைந்தாங் கிடப் பிசைந்தன

பரிமள தளந்தான் சமைத்த குங்கும
பரிவொடு பசுஞ்சாந் தெழக் கமழ்ந்தன
பலிகொள விரந்தாங் குமிக்க சிங்களர்
பரவையில் விழுந்தாங் கெடத் தொடர்ந்தன

கரிபரி உடன்சேர்ந் தெடுத்த கங்கர்கள்
கருவரை யிடந்தான் புகக் கடந்தன
கனலென வுகந்தான் சுடத் தொடங்கிய
கலிவலி பெலந்தான் புகத் துரந்தன

அரிபெற விரந்தான் தடக்கை யொன்றினில்
அகலிட முகந்தாம் புனற் சொரிந்தன
அரசரை நெடுஞ்சாங் கிடக்கை கொண்டன
அழகிய வளந்தான் திருப்பு யங்களே.

இது வளந்தானரான காடவராயர் கவி.

14 அலங்குலவும் வயற்பெறுகை ஆட்கொள்ளி காடவர்கோன்
பலங்குலவு மதசாலை பதிகளம் விடுகின்றன்
இலங்குமணி முடியரசர் யார்கொலோ இணையடியில்
விலங்குகலின் கலினென்ன வீதிதொறும் வருவாரே.

இது இவர்மகனர் ஆட்கொள்ளியாரான காடவராயர் கவி.

15 பொருகாம னம்பு புகுந்துயிர்மே லன்றிச்
செருகா விடையாமஞ் செல்லா—தொருகாலும்
பாகாகா மால்யானை கண்டு பணிந்தாளை
மோகாகா அந்திபடா முன்.

இது இவர்மகனர் நாலுதிக்கும் வென்றரான ஏழிசைமோகன் காடவராயர் கவி.

16 தடக்கு மாரன் சொரிசரப் பாயல்மேற்
இடக்கு மிவ்வுல கென்பதுங் கேட்குமே
வடக்கு மேருவுந் தெற்கு மலையமுங்
கடக்கு மாணையான் கச்சிய ராயனே.

17 மும்மலை முன்பெறிந்தாய் பின்பு முரணிரட்டர்
தெம்மலை வாதாவி சென்றெறிந்தாய்—மெய்ம்மைச்
செருவரசே பின்னிச் சிலம்பா வெறிந்த
ஒருவரைசே மேனு ளுடன்று.

இது இவர் தம்பியார் அரசநாராயணன் கச்சியராயரான காடவராயர் கவி.

இவர்மகன் சக்கரையாண்டு ஆயிரத்தொருநூற்றெட்டினுல் ஆடிமாஸத்துப் பிற்பத்தில் கண்டராதித்தன்வாசலுக்குமேற்கே புறப்பட்டுக் கற்கடக மாராயன் கூடலும் அதியமானுடும் அழித்து வெற்றிக்கொடி உயர்த்த[து?] அனுமனும் பொறித்தான் ஆளப்பிறந்தான் வீரசேகரனன காடவராயன்.

18 பாரள வல்ல பணைத்தோ ளளவு பகலவன்போந்
தேரள வல்லநின் செங்கோ லளவு கிகிரிச்செங்கை
காரள வல்ல பரவீர சேகர காடவநின்
போரள வெவ்வள வாம்பர வேந்தர் புறத்தளவே.

19 தாரார் மணிப்புயந் தண்ணந் துழாய்மண நாறுஞ்சந்தக்
காரார் திருநிறஞ் செய்யாள் திருமண நாறுங்கச்சி
யாரார் கிகிரிக்கை யாளப் பிறந்தாற் கசஞ்சலற்குப்
பாராள் வடமன்னர் பொன்முடி நாறும் பதாம்புயமே.

20 விடையள விட்ட கொடிவீர சேகர காடவநின்
கடையள விட்டது ஞாலங்க ளேழையும் வாழிநின்போர்ப்
படையள விட்டது பத்துத் திசையும் பரியமுத்தக்
குடையள விட்ட திரிசுடர் சூழண்ட கூடத்தையே.

13—20 இச்செய்யுட்கள் 263, 264 என்ற எண்களுள்ள சாசனங்களில் வருகின்றன. இச்சாசனங்கள் "அரசநாராயணன் ஆளப்பிறந்தான் வீரசேகரனன காடவராயன் கண்டராதித்தன் வாசலில் கல்வெட்டுவித்தபடி" என்று தொடங்குகின்றன. வீரசேகரனுடைய வம்சாவளி வருமாறு:—

வளத்தானுர் காடவராயன்

ஆட்கொள்ளியார் காடவராயன்

எழிசைமோகன் காடவராயன் | அரசகாராயணன் கச்சியராயர் காடவராயன்

ஆளப்பிறந்தான்வீரசேகரன் காடவராயன்

கற்கடகமாராயனுக்கு உரிய கூடலையும், அதிகமானுக்கு உரிய நாட்டையும் சகம் 1106-ல் அழித்து, தனது அனுமக்கொடியை நாட்டினுன் என்று கூறுவர். இங்கே கூடல் என்றது சேலம் ஜில்லாவிலுள்ள தீர்த்தாமலையாக இருக்கலாமென்பர்.

21 வார்மன்னு வெல்கழல் மானவன் பாலுங்கள் மாமரபிற்
தார்மன்னர் பெற்ற தனுமக் கொடியித் தலம்புரக்குங்
கார்மன்னு செம்பொற் கனகொடை மோகதென் கச்சிநகர்ப்
போர்மன்னு வேள்பெற்ற தாரும் பெறுத புலிக்கொடியே.

22 சிவனன்று நல்கிய செஞ்சின வேற்றுக் கொடியுயர்த்த
கவனக் தருபரிக் கச்சியர் கோன்பச்சை யேயுயர்வித்
தவனங் குலபதி தன்னுடன் போந்துதண் காவிரிநீர்ப்
புவனங் கொடுத்துக்கொண் டானவன் பால்வெம் புலிக்கொடியே.

23 புட்பசி மாற்றிய போர்மன் னவருக் கினிப்புவியி
லெட்பக வன்ன பகையில்லை ராஜேக்த்ர.........
............ க்காடவ கொன்று குவித்ததற
னுட்பகை பற்றப் புறப்பகை யோட்டுண்டு வெட்டுண்டதே.

21—23 இச்செய்யுட்கள் 265-ஆம் எண்ணுள்ள சாசனம். இச்சாசனம் காவிரிக்கரையையாண்ட அரசனைவென்று கீழ்ப்படுத்திய காடவன் ஒருவனைக் குறித்தது.